Registered No. M. 2330 'SIDDHANTHAM'
Vol. 29—No. 3

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'நன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 29 | மன்மத பங்குனி 1956 மார்ச் | இதழ் 3

மயிலை கிழார் இளமுருகனார்
மணிவிழா மலர்

உள்ளுறை பக்கம்

பத்திராசிரியர் : C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
10, மாண்டீத் ரோட், எழும்பூர், சென்னை-8

ஆண்டு சந்தா ரூபா 3 தனிப்பிரதி அணா 4

ம. பா. மணி விழா நிகழ்ச்சி

7-3-56 புதன்கிழமை காலை 5 மணிக்கு, நன்கு அலங்கரிக்கப் பெற்றிருந்த ‘திருவருளகம்’ என்னும் தமது இல்லத்தில், திருமுறை ஓதலுடன் திரு. ம. பா. அவர்களது மணி விழா தொடங்கப்பெற்றது. மணமக்களுக்கு ஆதி சைவரால் மணி விழா வைதிகச் சடங்குகள் செய்து வைக்கப்பட்டன. இவ்விதழில் வந்துள்ள சமாஜ வாழ்த்தினைத் திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் எம். ஏ. அவர்கள் படித்துத் தந்தார்கள். காலை மாலை இரு வேளைகளிலும் சென்னை, பெங்களூர், வாலாஜாப்பேட்டை, ஆர்க்காடு, திருஆலங்காடு, தருமபுரம், நாகூர், வாலாஜாபாத், அண்ணாமலை நகர் முதலிய இடங்களிலிருந்து வந்த வாழ்த்துப் பாக்கள் வழங்கப் பட்டன. மாலை 6 மணிக்கு மீண்டும் திருமுறை ஓதல் நடைபெற்றது. விழாவின் காலை மாலை நிகழ்ச்சிகட்குச் சிறப்பாகச் சமாஜ செயற்குழுவினரும், ஏனைய சமாஜ அன்பர்களும், உறவினர்களும் திரளாகக் குழுமியிருந்தனர். திருவாளர்கள் - அமைச்சர் பக்தவச்சல முதலியார், பி.ஏ., பி. எல்., மேல்சபை அங்கத்தினர் புருஷோத்தம முதலியார், பி. ஏ., நடராஜ நாடார், பி. ஏ., பி. எல். முதலியவர்கள் போந்து விழாவினைச் சிறப்பித்தார்கள். திருவாளர்கள் இலங்கை சு. நடேசப் பிள்ளை, வட்டுக்கோட்டை நாகலிங்கம், பழனி திரு. க. அரங்கசாமி—ஆதிலட்சுமியார் உள்ளிட்ட பலரது தந்திகளும், திருவாளர்கள் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, வெள்ளைவாரணனர், வச்சிரவேலுமுதலியார், அருணை வடிவேலு முதலியார், மெய்கண்டார் கழகம் ஆகிய பலர் அஞ்சல் மூலம் அனுப்பிய வாழ்த்துக்களும் படிக்கப்பட்டன. விழாவின்போது, 400 வணக்கப் பாடல்களும், மணி விழாத் தலைவர் வரலாறும் கொண்ட மணி விழா மலரும், விபூதிப் பட்டுப் பையும் மணி விழாத் தலைவரால் வந்திருந்த அன்பர்கட்கு இலவசமாக வழங்கப்பட்டன. இரவு அறுசுவை உண்டி அனைவர்க்கும் அளிக்கப்பட்டது.—தி. கி. நா.



மயிலை கிழார் இளமுருகனார்

(மணிவிழாத் தலைவர்)

Regd. M. 2330

உ
சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாரியையுள் நாடு

மலர் 29 | மன்மத பங்குனி 1956 மார்ச்சு | இதழ் 3

மணி விழா

ஆசிரியர்

ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களின் மணி விழாவினைச் சிறப்பாகக் கொண்டாட நமது சமாஜம் கடமைப் பட்டிருக்கிறது. நமது சமாஜம் அன்னாரது ஆயுள் தொண்டு என்றால் அது மிகையாகாது. சமாஜத் தொண்டர்களில் அவர் 'ம. பா.' 'மயிலைகிழார் இளமுருகனார்' 'மயிலை மாதவ தாசன்' என்ற புனைபெயர்களால் வழங்கப்படுவார். அவரது மணி விழா வரும் இத் திங்களில், நம் சித்தாந்த இதழை ம. பா. மணி விழா மலராக வெளியிடுகிறோம்.

நம் நாட்டில் சமயத்தையும் சோதிடத்தையும் ஒட்டி ஒரு மனிதனுடைய வாழ்க்கைப் பிரிவுகளும் விழாக்களும் ஏற்படும். அவைகள் கோயில்களிலே நித்தியம், நைமித்திகம், விசேடம் என்று மூன்றாகக் கொண்டு நடத்துவார்கள். மனிதர் களிலே பருவங்களை ஒட்டி ஓர் ஆண்டு, 60 ஆண்டு (சஷ்டி-ஆப்தி), 78 ஆண்டு (சதாப்தம் அல்லது 1000 பிறை) நிறைவு நாட்கள் கொண்டாடப்படும். அந்நாட்களில் சடங்குகள் செய்து ஆலயங்களில் விசேட பூசை செய்வதும் வழக்கம். இதனைத் திருக்கடவூர் முதலிய புனிதத் தலங்களில் செய்வதே நல்லது என்பார்கள்.

60 ஆண்டு கொண்டதை ஒரு கால சக்கரமாகக் கணிப் பார்கள். அவ்வாறு 60 ஆண்டு நன்றாக வாழ்க்கை நடத்து பவர் நீண்ட ஆயுள் படைத்தவர் என்றும் கூறுவார்கள். அப்போது பெரியவர்கள் அவரைப் பல்லாண்டு வாழும்படி

வாழ்த்துவார்கள். இதுதான் மணி விழாவாக இப்போது கொள்ளப்படுகிறது. இந்த வகையில் சடங்குகளேயன்றி பொதுமக்கள் ஆசிகளும் வாழ்த்துக்களும் தான தர்மங்களும் நிறைவேறுவது தற்கால வழக்கமாகும்.

நமது தலைவரது மணிவிழாமாதத்தில் அவர்கள் செய்துள்ள பற்பல தொண்டுகளையும், நாம் நினைவு கொள்ளவேண்டும்.

நண்பர்கள் தொடுத்த இம்மலர் மாலையை நம் தலைவருக்கு அணிகிறோம். நமது சமாஜம் தனியே அவரைச் சிறப்புக் கூட்டத்தில் சிறப்பிக்க எண்ணியுள்ளது. அந்நாளில் அன்பர்கள் போந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

என் செய்வான் தோன்றினேன்?

ம. பா. எழுதிய தன் வரலாறு

1. திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட திருநாவுக்கரசு சுவாமிகள் "என் செய்வான் தோன்றினேன் ஏழையேனே" என்று தம்மையே நோக்கிக் கேட்கின்றார். "குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்லேன் குற்றமே பெரிதுடையேன்........ஞானியல்லேன்........ வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேசவல்லேன்" என்று தமது தாழ்வெனும் தன்மையை விளக்குகிறார். குணம் என்னும் குன்றேறி நின்று, பிறப்பெனும் கடல் நீத்தபிரானாகிய அப்பெரியார், நமக்கு உபதேசித்த உண்மைகளும் உயரிய வாழ்க்கை நிலைகளும் அளவற்றவை. சமய குரவர்கள் நால்வருள் "சொற்குறுதிக்கு அப்பர் எனச் சொல்" எனும் பெருமை அவரைச் சாரும். "என் செய்வான் தோன்றினேன் ஏழையேனே" என்று அவரே தம்மைக் கூறிக் கொள்வாராயின், "என் நான் செய்கேன், யாருக்கென் சொல்லுகேன்" என்று நம்மாழ்வார் சொல்வதுபோல், ஒன்றும் எழுதாமலும் சொல்லாமலும் செய்யாமலும் இருப்பதே மிகப் பொருத்தமாகும். எனினும், பற்பல பெரியார்கள் எனது வரலாற்றை நானே எழுதவேண்டும் என்று அடிக்கடி வற்புறுத்தினர்கள். சென்னை அரசாங்கத்தில் உழவு உணவுப் பகுதியில் உயர்நிலைப் பதவி வகிக்கும்

(Deputy Secretary) ராவ்சாஹெப் திரு. நல். முருகேச முதலியார் B. A. அவர்கள், இப் பெரியார்களுள் ஒருவர். எனவே நானும் எழுதுகின்றேன்.

2. **சீலமுள தாயர் தந்தை :** எனது தாயார் மயிலை சின்னண்ணா ஏகாம்பர முதலியார் புதல்வி அன்னம்மாள். எனது தந்தையார் மயிலை மாசிலாமணி முதலியார். இவர் கட்குத் திருமணம் 1888-ஆம் ஆண்டில் நடந்தது. அவ் வாண்டிலிருந்தே, கந்தர் சஷ்டி விரதத்தை மேற்கொண்டு, திருமயிலைக் கபாலீச்சரத்தில் அமர்ந்துள்ள சிங்காரவேல் அண்ணலை வணங்கினர். அண்ணலார் தண்ணருளால், ஒரு ஆண் மகவை மன்மத வருஷம் மாசிப் பூராடத்தில் (8-3-1896) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்குப் பெற்றெடுத்தனர். பிறந்த நாளையும் பிறப்பித்த வேளையும் அவன் அருளையும் மனத்துட்கொண்டு, பாலசுப்பிரமணியன் என்று அம்மகவிற்குப் பெயர் சூட்டினர். "பெற்றலும் பிறந்தேன்" என்று நம்பி ஆரூரர் கூறுவது நினைவிற்கு வரு கிறது. "ஏன் பிறந்தேன்" என்ற வினாவிற்கு இஃதே விடை.

3. **நாளும் கோளும் நல்ல நல்ல :** எனது பெற் றோர்கள் தக்க ஜோதிடர்களைக் கொண்டு எனது ஜாதகத் தைக் கணித்தார்கள். கோள்நிலைகள் நன்றாயமைந்தன. தந்தையார் பல ஆண்டுகள் கழிந்த பின்பு எனக்கொரு கட்டளையிட்டார். எனது ஜாதகத்தை ஒருவருக்கும் காட் டக்கூடாதென்பதே அக்கட்டளை. ஒன்றைமட்டும் மகிழ்ச்சி யோடு கூறினர். "உன்னுடைய வாழ்க்கை செம்மையாக இருக்கும். நீ பிறந்த கடக லக்கினத்தில், குரு உச்சத்தில் இருப்பதால் உனக்கு என்றைக்கும் எவ்விதத் தீங்கும் வாராது" என்று அவர் சொன்னது, எனக்கு எப்போதும் மனவுறுதியைத் தந்துகொண்டேயிருக்கிறது; சமய வாழ் விலும் மன அமைதியைக் காத்து வருகிறது.

4. **பிறந்தவாறும் வளர்ந்தவாறும் :** எனது பெற் றோர்கள் மிகச் சிறந்த சைவப்பற்றுடையவர்கள். திருக் கோயில் வழிபாடு, சிவனடியார்களைப் பேணுதல் முதலிய வற்றை முறையாக நடத்தியவர்கள்; சிவஸ்தல யாத்திரை

செய்து திருவிழாக்களைக் கண்டு அனுபவித்தவர்கள். நாடோறும் செம்மையான சமய வாழ்க்கை வழி நின்று இல்லறமாம் நல்லறத்தைத் திறம்படக் காட்டியவர்கள். திருப்போரூர் சந்நிதிமுறை முதலிய பிள்ளைத் தமிழ் நூல்களிலுள்ள தாலாட்டுப் பாடல்களைப் பாடி, என்னைத் தொட்டிலிற் படுக்கவைத்து ஆட்டுவார்கள். பச்சிளங்குழவிப் பருவத்திலேயே அருள்நிரம்பிய திருப்பாடல்கள் எனது செவிக்கு விருந்தளித்தன. பக்திச் சுவையை ஊட்டின. பிறந்து மொழி பயின்றபின்னெல்லாம் சிறுசிறு பாடல்களைக் கற்பித்துத் தெய்வ வணக்கத்தில் பயிற்சி தந்தார்கள். காலையில் முகம் கைகால்களைச் சுத்தி செய்து, திருநீறணிந்து, பூசையறைக்குள் நுழைந்து கடவுளை வணங்கும் பழக்கத்தைக் கற்பித்தார்கள். தந்தையார் பிள்ளையார் பூசை, சிவபூசை செய்யும்போது, நான் எதிரில் உட்கார்ந்து பாடவேண்டும். பூசையில் நிவேதிக்கப்பெறும் வாழைப்பழம் எனக்குக் கிடைக்கும். எனது மூன்றும் வயதில், தந்தையார் பெங்களூருக்கு உத்தியோக முறையில் மாற்றப்பட்டார். பாலசுந்தர முதலியார் எனும் நண்பர் வீட்டில் இறங்கினோம். அன்றைய பூசையை நடத்தும்போது, வழக்கம்போல் நான் எதிரில் உட்கார்ந்து பாடுவது பாலசுந்தர முதலியாருக்கு வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. பூசையிறுதியில் நிவேதித்த பழம் எனக்கு வந்தது. மற்றொரு பழத்தை, எனக்குப் பாடற்பரிசாகப் பாலசுந்தர முதலியார் அளித்தார். நான் அதை வாங்காமல் “இவர் யார் அப்பா சைவர்தானா, இந்தப் பழத்தை வாங்கிக்கொள்ளட்டுமா” என்று கேட்டேனாம். (இருபத்தைந்து ஆண்டுகளின் பிறகு நான் பெங்களூர் சென்றபோது அந்த பாலசுந்தர முதலியாரே இதை என்னிடம் சொன்னார்.) வாங்கிக் கொள்ளலாம் என்று விடை பிறந்த பிறகே நான் அதை வாங்கி உட்கொண்டேன். தாய் தந்தையர் என்னைப் பழக்கிய வகைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. ஏனைய பற்பல வழிகளிலும் அன்பு ஆதரவு இரக்கம் ஈகை உண்மை ஊக்கம் முதலியன விளங்கிப் பெருகும் முறையில் பழக்கினார்கள்.

5. **தாயாருக்கு அம்பிகை அருள்:** பெங்களூரில் அக்காலத்தில் ப்ளேக் (Plague) என்ற தொத்துவியாதி வருடந்தோறும் குளிர்காலத்தில் வரும். தந்தையார் அலுவலகத்தில் வேலைபார்த்த ஒரு பார்ப்பன நண்பர் எங்கள் வீட்டுக்கெதிர்வீட்டில் குடியிருந்தார். அவருக்கு ப்ளேக் பிடித்தது. தந்தையார் அவரைப் போய் விசாரித்ததோடு நில்லாது, காய்ச்சல் மிகுதியாயுளதா என்பதை யறியத் தொட்டும் பார்த்துவிட்டார். அன்றிரவே தந்தையாருக்கும் ப்ளேக் நோய் வந்தது. மிக விரைவில் நோய் மிகுதியாயிற்று, உயிர் ஊசலாடிற்று. மருத்துவர்கள் மருந்து கொடுத்தார்கள். அவற்றோடு "அவ்வினைக்கிவ்வினை" எனத் தொடங்கும் சம்பந்தர் தேவாரப் பதிகத்தை இடைவிடாது ஓதியும், திருநீற்றை மருந்தோடு சேர்த்து உட்கொண்டும் வந்தார். தாயார் அம்பிகையைக் கண்ணீரும் கம்பலையுமாக நின்று மாங்கல்ய பிக்ஷ வேண்டினர். தனது மங்கிலியத்தை அம்பிகை தமது திருக்கரங்களால் தாங்கிப் பிடிப்பது போன்ற காட்சியைக் கனவிற் கண்டார். கனவு பலித்தது. தந்தையார் பிழைத்தெழுந்தார். எனக்கு அப்போது வயது நான்கு.

6. **கல்வித் தொடக்கம்:** ஐந்தாம் வயது தொடங்கியவுடன் (1900 வருஷம் மே மாதம்) எனக்குக் கல்வி தொடங்கப்பெற்றது. எங்கள் குலதெய்வமாகிய திருப்போரூர் முருகப்பிரானுக்குப் பிரார்த்தனை செலுத்தும் முறையில் சென்னி மயிர் நீக்கும் மணவினையும், மனம் முகிழ்த்த சுருள் நீக்கி மலர்விக்கும் கலை பயிலத் தொடங்குவிக்கும் மணவினையும் நிகழ்ந்தன. தந்தையார் நாடோறும் பாடம் சொல்லி வந்தமையால், பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு வகுப்பினும் முதலிடம் என்னதாகவே இருந்தது. பள்ளியாசிரியர்கள் வியக்கும்படி நான் நடந்து கொண்டேன். வகுப்பில் ஆசிரியர்கள் நடத்தும் பாடங்களை மிக எளிதில் புரிந்துகொள்ளும் ஆற்றலிருந்தமையால், சிறுபிள்ளைத் தனத்திற்கியல்பான சிறு குறும்புகளும் சிறு பேச்சும் உடன் நிகழ்ந்தன. இதற்குப் பிரம்படியும் அவ்வப்போது கிடைத்

தது. மாதந்தோறும் பள்ளியிலிருந்து தந்தையாருக்கு அறிக்கை (Progress Report) வரும். அதில் "a little talkative and mischievous" என்ற குறிப்பு தவிரா திருக்கும். ஒவ்வொரு மாதமும் தந்தையார் கடிவர், அடியும் தருவர்.

7. **பள்ளிக் கல்வி :** எனது பள்ளிக் கல்வி மூன் றிடங்களிலும் ஐந்து கல்வி நிலையங்களிலும் நடைபெற்றது. 1900ஆல் சிலமாதங்கள் பெங்களூர் சோமேசர் கோயிலுக் கருகில் ஒரு ஆரம்பப் பள்ளியிலும், 1901–1904 நீலகிரி உதகமண்டலத்தில் வெஸ்லியன் மிஷன் ஆரம்பப் பள்ளி யிலும், 1905-ல் முதல் ஆறுமாதம் சி. எம். எஸ். உயர்நிலைப் பள்ளியிலும், பிறகு சென்னையில் 1905 பிற்பகுதியில் வன்னியர் சங்கம் பள்ளியிலும், 1906 ஜனவரி முதல் 1911 எப்ரில் வரை பி. எஸ். ஹைஸ்கூலிலும் பயின்றேன். 1904-ம் ஆண்டில் நடந்த பிரைமரி பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறினேன். அதற்காகச் சில பரிசுகளும் கிடைத்தன. அந்த வெஸ்லியன் மிஷன் பள்ளியில், ஞாயிற்றுக்கிழமை தோறும் முற்பகலில் விவிலிய வகுப்பு நடக்கும். ஆங்கில மாதர்கள் ஆங்கிலத்தில் சம்பாஷணை செய்யப் பயிற்சி தரு வார்கள். பெப்பர்மிண்ட் முதலிய இனிய பண்டங்களையும் தருவார்கள். மத்தேயு, லூக்கா முதலியோர் எழுதிய சுவி சேஷங்களைப் படித்தேன். அந்த இளம் பருவத்திலேயே சிலுவைச் செல்வர் வரலாற்றையறியும் பேறு எனக்குக் கிடைத்தது. எனது தந்தையாருக்கும் ஏசுகிறிஸ்துவினிடம் நல்ல மதிப்புண்டு. பிற்காலத்தில் அதிருஷ்டவாசமாகச் சென்னை மூர் மார்க்கெட்டில் பழைய புத்தக விற்பனைக் கடைகளில், டோர்னக்கல் பிஷப் ஒருவர் அரிதிற் சேகரித்து வைத்திருந்த நூறு புத்தகங்கள், அவர் அருமையான பல குறிப்புக்களோடு (marginal and interlinear notes) எனக்குக் கிடைத்தன. அவற்றையெல்லாம் ஊன்றிப் படித்த போதெல்லாம், சைவத்திற்கும் கிறிஸ்தவத்திற்கும் உள்ள பற்பல பொதுப்பகுதிகள் நன்கு விளங்கின.

8. **இளமையில் துணிவு:** நீலகிரியில் நான் படித்த காலத்தில் ஐரோப்பியர்கள் உதகையில் நிரம்பியிருந்தனர். சென்னை மாகாண கவர்னர்கள் எல்லோரும் வெள்ளையரே. உதகை நகர மன்றத் தலைவரும் உத்தியோகஸ்தர் பலரும் வெள்ளையரே. அவர்களுள் ஒருவர் ஹெல்த் ஆபீசர் வேலை பார்த்த கிங் என்பார். அவர் குதிரைமேலேறிக்கொண்டு, தெருக்கள் சுத்தமாக உள்ளனவா என்று பார்ப்பதற்காக, வாரத்துக் கொருமுறை நாங்கள் குடியிருந்த புது அக்ரஹாரம் வருவது வழக்கம். அப்படி வந்த ஒருநாளில், பள்ளிக்கூட விடுமுறையாதலின் நான் சில இளஞ்சிறுர்களோடு விளையாடிக்கொண்டிருந்தேன். ஒரு வெள்ளைக்காரன் குதிரைமேல் வருவதைக் கண்டு பயந்து எனது நண்பர்கள் ஓடிவிட்டார்கள். நான் மட்டும் அஞ்சாமல் நின்று "Good morning sir" என்று அவரை வரவேற்றேன். அவர் அதற்கு மகிழ்ந்து என்னைத் தமது குதிரைமேல் ஏற்றிக் கொண்டுபோய், சில தெருக்களைச் சுற்றிப்பார்த்துவிட்டு, என்பெயர், படிக்குமிடம், தந்தையார் பெயர் தொழில் முதலியவற்றை விசாரித்து, என்னை இறக்கி விடும்போது "நீ ஒரு டெபுடி கலெக்டராகி விடுவாய்" என்று வாழ்த்தினர். எனது தந்தையார் வந்தவுடன், "டெபுடி கலெக்டர்" என்பதன் பொருள் என்னவென்று கேட்டபோது, அவருக்குப் பெரு வியப்பாக இருந்தது. அயல் வீட்டிலுள்ளவர்கள் விவரம் சொல்லியபிறகு எனது துணிவிற்கு மெச்சினர். இந்த கிங் என்பவரே, பிற்காலத்தில் மருத்துவத்துறையில் உயர்வு பெற்று (இப்போது சென்னை கிண்டியிலுள்ள) பெரிய மருத்துவ நிலையத்தின் தலைவராயினர். அவர் பெயரை வைத்தே இப்போது அது "King's Institute of Preventive medicine" என்று கூறப் பெறுகிறது. அம்மை, காலரா, ப்ளேக், நாய்க்கடி முதலிய வியாதிகளைத் தடுத்துப் போக்கும் மருந்துகள் (vaccines) அங்கு தயாரிக்கப் பெறுகின்றன.

9. **சென்னையில் உயர்நிலைப் பள்ளிக் கல்வி:** தந்தையார் உத்தியோகம் 1905-ம் ஞூ மேமீ நீலகிரியி

லிருந்து சென்னைக்கு மாற்றப்பட்டது. அக்காலத்தில் பள்ளிக்கூடங்களில் ஜனவரி முதல் டிசம்பர் வரையில் ஓராண்டு கணக்கிடப்படும். 1905-ம் ஆண்டு ஜனவரியில்தான் பி. எஸ். ஹைஸ்கூல் தொடங்கப் பெற்றது. மேமீ அப் பள்ளியில் என்னைச் சேர்க்க இயலவில்லை. ஆண்டின் நடுவில் சேர்ப்பதில்லை என்றார்கள். எனவே வன்னியர் சங்கம் நடத்திய பள்ளியில் ஆறுமாதகம் படித்து முதலாவது form படிப்பை முடித்துக்கொண்டு, 1906-ம் ஆண்டு ஜனவரியில் இரண்டாவது பாரத்தில் போய்ச் சேர்ந்தேன். பி. எஸ். உயர் நிலைப்பள்ளி மிக உயர்வான தரத்தில் நடத்தப்பெற்றது. அக்காலத்தில் சென்னையிலுள்ள பிரபல வழக்கறிஞர்களுள் மயிலாப்பூரிலிருந்த சிவஸ்வாமி ஐயர், கிருஷ்ணஸ்வாமி ஐயர், சுந்தரமையர் ஆகிய மூவரும் இந்தப் பள்ளிக்கூடத்தின் நடைமுறையில் ஈடுபட்டனர். ஒவ்வொரு வகுப்பிலும் சமயக்கல்வி கட்டாயபாடமாயிருந்தது. வாரத்திற்கொரு முறை சிறந்த பேச்சாளர்களைக் கொண்டு சமயச் சொற் பொழிவுகள் நடக்கும். இவைகட்கு இம்மூவரில் ஒருவர் தலைமை வகிப்பார். ஆங்கிலத்திலும் தமிழிலும் சில கட்டுரைக ளடங்கிய ஒரு மாதப் பத்திரிகை "P. S. High School Magazine" எனும் பெயரால் நடத்தப்பெற்றது. எனது படிப்பிலும் நன்னடத்தையிலும் தலைமையாசிரியர் பஞ்சாப கேசய்யர் அவர்களும், கணிதப் போதகாசிரியர் கஸ்தூரி ரங்கையரவர்களும், சரித்திரப் போதகாசிரியர் ஸ்ரீநிவாஸா சாரியார் அவர்களும் மிகவும் ஈடுபட்டனர். இம்மூவருள்ளும் கஸ்தூரிரங்கைய்ரவர்களே என்னை மிக்க அன்போடு பாராட்டுவார். நானும் அவரிடத்து அளவு கடந்த அன்பு செலுத்தினேன். சமயக்கல்வி வகுப்புக்களை அவர் நடத்துவார். அவைகளில் உபயோகப்படுத்துவதற்கென்றே இராமாயண வினாவிடை, பாரத வினாவிடை, பாகவத வினாவிடை, ஆர்யமத உபாக்கியானம் முதலிய சிறுநூல்களை வெளியிட்டார். ஒவ்வொரு நாளும் திருமயிலைக் கபாலீச்சரம் சென்று தொழுவார். தென்முகக் கடவுள் எதிரில் பஞ்சாக்கர ஜபம் செய்வார்.

10. **வடமொழிப் பயிற்சி**: இந்த உயர்நிலைப் பள்ளி, பார்ப்பனர் ஒருவர் தந்த மூலதனத்தைக்கொண்டு, பார்ப்பனச் செயற்குழுவினரால் நடத்தப்பெற்றது. நான்காவது பாரம் முதல் ஸம்ஸ்க்ருதம் பயிற்றுவிக்கப்பட்டது. இப்பயிற்சி எனக்குப் பிற்காலத்தில் பேருபகாரமளித்தது. சைவத்திலும் வைணவத்திலும் காட்டப்பெறும் வடமொழி மேற்கோள்களை எளிதில் புரிந்துகொள்ளும் வசதி ஏற்பட்டது. இக்காலத்தில் பற்பல மேடைகளிலும் மாநாடுகளிலும் வடமொழிப் பயிற்சி வற்புறுத்தப்படுவதை நாம் பார்க்கிறோம். ஐம்பதாண்டுகட்கு முன்னரே இக்குறிக்கோள் நடைமுறையில் இந்த உயர் நிலைப்பள்ளியில் நிறைவேற்றப்பட்டது. தலைமையாசிரியரே ஸம்ஸ்க்ருத பாடங்களை நடத்தினர். Bhandarkar இயற்றிய வடமொழி இலக்கணமும், இலகுவான பாட புத்தகங்களும் போதிக்கப்பட்டன. அக்காலத்திய சமயச் சொற்பொழிவுகளில் உபநிடத வாக்கியங்களும் கீதா சுலோகங்களும் அடிக்கடி கையாளப்படுவதுண்டு. காலப்போக்கில் இந்த நிலை மாறிவிட்டது.

11. **விளையாட்டாகவும் களவில் கலத்தல்கூடாது**: நான் நான்காவது பாரத்தில் படித்துக்கொண்டிருந்தேன். எனது அம்மான் சேய் மூன்றாவது பாரத்தில் படித்துவந்தான். அவன் வகுப்பு மாணவன் ஒருவன் Jack the giant killer எனும் சிறு நூல் ஒன்றை மேஜைமேல் வைத்துவிட்டு மறந்தாற்போல் வீடு சென்றான். இதை மற்றொரு மாணவன் கவனித்து அப்புத்தகத்தை எனது அம்மான் சேயிடம் கொடுத்து, “இதை ஜாக்கிரதையாக உன் வீட்டில் வைத்திரு, அவனிடம் சொல்லாதே, அவனை அழவைக்கலாம்” என்று சொன்னான். அம்மான் சேய் அப்புத்தகத்தை என்னிடம் கொடுத்தான். நானும் அதை என்னிடம் வைத்திருந்தேன். அடுத்த நாளே இந்த செய்தி எப்படியோ வெளியாகிவிட்டது. விசாரணை நடந்தது. இந்த விளையாட்டுக் களவில் கலந்துகொண்ட மூவருக்கும் அடுத்த நாள் காலையில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தின் முடிவில் பிரம்படியும், எல்லா மாணவர்கட்கும் விளையாட்டாக

வும் களவுச் செயலில் கலத்தல் கூடாதென்ற உபதேசமும் தலைமையாசிரியரால் அளிக்கப்பட்டது. இவ்வாறு என்னை ஒறுத்திராவிட்டால், பிற்காலத்தில் எவ்வகையான தீமைகள் செய்திருப்பேனே அறியேன். என் துடுக்கடக்கி நல்வழியில் நிறுத்தியமைக்குத் தலைமையாசிரியர்க்கு நான் என்றென்றும் நன்றி செலுத்துகிறேன்.

12. **மாணவனைப் பெற ஆசிரியர் போராட்டம்:** 1910-ம்வருஷம் ஆறாவது பாரத்திற்கு மாற்றப்பட்டேன். அந்த ஆண்டில்தான் S. S. L. C. பரீக்ஷை திட்டம் தொடங்கிற்று. முதல் பரீக்ஷை 1911வருஷம் மார்ச்சுமீ நடந்தது. 1910வருஷம் ஜூலை மாதத்தில் கணக்கு அல்லது சரித்திரபாடம் Optional என்ற முறையில் எடுக்கவேண்டி வந்தது. அதுவரையில் எனக்கு இரண்டிலும் நல்ல மார்க்கு கிடைத்தது. கணக்காசிரியரும் சரித்திர ஆசிரியரும் என்னைத் தத்தமது வகுப்பிலேயே சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று வாது செய்தனர். தலைமையாசிரியர் எனது விருப்பத்தைக் கேட்டார். ஆசிரியர்களே முடிவுசெய்தல் நலம் என்றே சொன்னேன். சரித்திரத்தைவிடக் கணக்கில் எனக்கு மார்க்கு அதிகமாயிருந்தமையாலும், கணக்காசிரியர் தலைமையாசிரியருக்கடுத்த பதவியில் இருந்தமையாலும் என்னைக் கணக்கு வகுப்பில் சேர்த்தார்கள். இம்மாதிரியான போராட்டம் வேறு எந்த மாணவனைப் பற்றியும் அவ்வாண்டில் நிகழவில்லை.

13. **பள்ளியில் படிப்பின் முடிவு:** முதன்முதலாக 1911-ம் வருஷம் நடந்த S. S. L. C. பரீக்ஷையில் எனது பள்ளிக்கூடத்தில் அதிக மார்க்குபெற்ற முதல்வன் என்ற பதவியோடு தேறினேன். இதற்காக எனக்குப் பல புத்தகப் பரிசுகள் வழங்கப் பெற்றன. General Proficiency, Mathematics, Good Conduct முதலியவற்றுக்கும் பரிசுகள் கிடைத்தன. எனது S. S. L. C. புத்தகத்தில் தலைமையாசிரியர் Character and conduct excellent என்று எழுதினர். பிறகு பற்பல ஆண்டுகள் என்னைப் பார்க்கும்போதெல்லாம் தலைமையாசிரியரும் கணக்காசிரியரும் சரித்திர ஆசிரியரும் பிறரும் எனது க்ஷேமலாபங்களைப்

பற்றி விசாரிப்பார்கள். B. A. பரீக்ஷையில் முதல் வகுப்பில் முதல்வனாகத் தேறியது (First in the Presidency) அவர்கட்கு அளவற்ற மகிழ்ச்சி அளித்தது. நான் கல்லூரிக்குச் சென்ற சில ஆண்டுகளுக்குள் P. S. High School பழைய மாணவர் சங்கம் தொடங்கப் பெற்றது. அதற்கு என்னையே தலைவனாகத் தேர்ந்தெடுத்தார்கள். அந்த சங்கத்திற்கு இற்றை வரை இடைவிடாது என்னையே அவ்வப்போது தலைவனாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். எனது பள்ளியாசிரியர்கள் பலர் இறைவனடி சேர்ந்துவிட்டனர். ஒருவர் மட்டும் உயிரோடுள்ளனர். அவரே சரித்திர ஆசிரியராயிருந்து பிறகு பச்சையப்பன் கல்லூரிக்குச் சென்று, அங்கு பல்லாண்டுகள் பணி புரிந்து, இறுதியில் கல்லூரித் தலைவராக இப்போது அமைந்தகரையிலுள்ள புதுக்கட்டிடத்தைக் கட்டி முடித்த பெரியார் உயர்திரு. P. N. ஸ்ரீநிவாஸாசார்யார் ஆவார். அவர் நீடூழி வாழ்க.

14. **சொற்பொழிவுப் பயிற்சி :** எனது தகப்பனார் பெரும்பாலும் பெங்களூர், நீலகிரி முதலிய வெளியூர்களில் வேலை பார்க்க நேர்ந்தமையால், நான் பல ஆண்டுகள் எனது அம்மான் வீட்டிலேயே வளர்ந்து வந்தேன். மூத்த அம்மான் இராஜகோபால முதலியார் சென்னை உயர் நீதி மன்றத்தில் ஒரு லிகிதராக வேலை பார்த்து வந்தார். அவருக்கு என்னிடத்தில் அதிக அன்புண்டு. கோடை விடுமுறையில் என்னை அழைத்துக்கொண்டு அருகிலுள்ள தலங்களைத் தரிசிப்பார். அவருடைய சிறிய தகப்பனார் நித்தியாநந்த முதலியார் எனக்குச் சைவ பாடங்களைச் சொல்லி வைப்பார். தினந்தோறும் காலையில் அவரிடம் சென்று ஒரு புதிய பாடலைக் கற்கவேண்டும். ஞாயிற்றுக்கிழமைதோறும் பழைய பாடல்களை ஒப்பித்தல் கடமை. எனது பன்னிரண்டாம் வயதிலேயே ஞாயிறுதோறும், பிற்பகலில் ஒரு சிறு புராணப் பிரசங்கம் செய்யும்படி பணித்துப் பயிற்சி தந்தார். அவ்வீதியில் எங்கள் உறவினர்கள் ஆண்களும் பெண்களுமாக நாற்பது பேர் இருப்பார்கள். அனைவரும் என் பேச்சைக் கேட்கத் தவிராது கூடுவார்கள். நான் பிரசங்கம் தொடங்கு

முன் எவ்வாறு பேசவேண்டும் என்பதையும், பேசிமுடிந்த வுடன் பேச்சிலுள்ள தவறுகளையும் தனிமையில் எனக் கெடுத்துரைப்பார். இவ்வாறு எனக்குப் பேரருள் புரிந்த அப்பெரியாரை நான் மறக்க இயலாது. ஆங்கிலத்தில் சொற்பொழிவுப் பயிற்சியை P. S. High School ஆசிரியர் கள் தந்தார்கள். அங்கு ஒரு சொற்பொழிவுப் பேரவை வெள்ளிக்கிழமைதோறும் மாலையில் நடைபெறும். அதில் ஒவ்வொரு மாணவனும் சில நிமிஷங்கள் பேசவேண்டும். இவ்விருவகைப் பயிற்சி எனக்குப் பிற்காலத்தில் சைவ சபை களிலும் சென்னை சட்டசபையிலும், அவையஞ்சி மெய் விதிர்க்காது, தங்குதடையின்றிப் பேசுதற்குதவியாயிருந்தது.

15. **நாய்க்குட்டி தாத்தா :** மேற்கூறிய நித்தியா நந்த முதலியார் சிறந்த அறிவாளி. சைவ நூல்களெல்லாம் அவரிடமிருந்தன. சூளை சோமசுந்தர நாயகர், யாழ்ப்பாணம் கதிரைவேற் பிள்ளை முதலியவர்கள் அவருடைய நண்பர்கள். மயிலை கபாலீசர் கிழண்டை மாடவீதியில் தமது மைத்துன ரும் எங்கள் குலத்துக்கு நாட்டாருமாகிய கந்தசாமி முதலி யார் இல்லத்தில் இப்பெரியார்களுடைய சொற்பொழிவுகள் வாரந்தோறும் நடக்கும். "வேடிக்கை பார்ப்பதற்கு" என்னையும் அழைத்துச் செல்வார். அவர்களுடைய பேச்சு ஒன்றுமே எனக்குப் புரியாத இளம் பருவத்தினன் ஆயி னும், என்னிடத்துள்ள அன்பின் மிகுதியால் "குட்டி நாயே, கூடவே வா" என்பார். இச்சிறு பருவத்தில் அவருடைய பெயரையே அறியாத நான் அவரை "நாய்க் குட்டி தாத்தா" என்பேன். அஃதவர் செவிக்கு இன்பமா யிருந்தது. நான் கல்லூரிப் படிப்புத் தொடங்கிய பிறகு ஒவ்வொரு கோடை விடுமுறையிலும், நீலகிரியில் வேலை பார்த்த எனது தந்தையாரோடு மூன்றுமாத மிருப்பதற்கும் குளிர்ச்சியை நுகர்தற்கும் செல்வேன். முதன் முதலாகச் சென்றது 1912ம் ஆ. அப்போது, நாய்க்குட்டி தாத்தா "நீ நீலகிரிபோன மறுநாளே எனக்குக் கடிதம் எழுது" என்றார். நானும் "தேவரீர் நாய்க்குட்டி தாத்தா" என்று தொடங் கிச் சில வரிகள் எழுதியனுப்பினேன். அவர் மறுமொழிக்

கடிதத்தில் " நீ செவ்வையாகத் தமிழ் எழுதக் கற்றுக் கொள் " என்று குறித்தார். உடனே ஒரு கடிதத்தில் தமிழ்ப் பாடலாக மறுமொழி யனுப்பினேன். அப்பாடல் முழுமையும் இப்போது என் நினைவிற்கு வரவில்லை. அதிற் சில அடிகள் மட்டும் கீழ்வருவன :

" பூமலி புன்னையின் புனைநிழ லமர்ந்து
நாமலி ஞான சம்பந்தனார் போற்றிடும்
கயிலை நிகர்க்கும் மயிலைப் பதிக்கண்
தொழுதுணை மாபின் பழுதிலா வித்து "

இக்கடிதத்தை அவர் தமது நண்பர்கட்கெல்லாம் காட்டி மகிழ்ந்தனர். இப்பெரியார், ஞானசம்பந்தரை ஆசாரிய கோலத்தில் எழுதிய படத்தைத் தமது ஆசிரியர் சோமசுந்தர நாயகர் கட்டளைப்படி, நாடோறும் பூசிப்பார். 1914ம் ஞூ ஐப்பசிமீ கிருத்திகை நாளில் அவ்வாறு நடுப்பகலில் பூசித்து அஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். மாரடைப்பினால் நமஸ்கரித்தவர் எழுந்திலர். இவ்வாறு சிவபதம் எய்தியவர் வரலாற்றை நான் கண்டதே யில்லை. அன்று காலையில் அவரோடு அளவளாவி யிருந்துவிட்டு சென்னை அரசாங்கக் கல்லூரிக்குச் சென்றேன். மாலை கல்லூரியிலிருந்து திரும்பி வரும்போது சங்கும் தாரையும் தம்பட்டமும் ஒலிப்பதைப் பார்த்தேன். என் அழுகையை எவராலும் மாற்ற முடியவில்லை. இறந்தவருடைய மனைவியே என்னைத் தேற்றும்படி யாயிற்று.

16. **ஞானக்கண்ணும் துரைக்கண்ணும் :** எனது தாயாரைப் பெற்ற பாட்டியாருக்கு ஆறுமாதத்திற்குள் இரண்டு பேரன்மார்கள் பிறந்தனர். ஒருவன் பிள்ளைவயிற்றுப் பேரன் ஏகாம்பரம். மற்றொருவன் பெண்வயிற்றுப் பேரனாகிய நான். பாட்டியார் " இருவரும் எனக்கு இரு கண்கள். மூத்தவன் துரைக்கண். இளையவன் ஞானக்கண். இளையவனாகிய எனக்கு இப்படி வைக்கப்பட்ட "ஞானக்கண்" என்ற பெயரே, எனது உறவினர் அனைவராலும் இன்றைக்கும் வழங்கப்பெற்று வருகிறது. எனக்கு "துரைக்கண் "

என்று பெயரிடாமல் "ஞானக்கண்" என்று பாட்டியார் ஏன் பெயரிட்டார்கள் என்பதை, அவர்கட்குள் நின்றுணர்த்திய இறைவனே கூறவல்லான். துரைக்கண் திருமணம் நடைபெற்ற இரண்டாண்டுகட்குள் சிவபதம் (1921ல்) அடைந்துவிட்டான். ஞானக்கண்ணுக்கு இறைவன் இன்னம் உயிர்ப்பிச்சை யளித்து வருகிறான். எனக்குச் சில பல கண்டங்கள் வந்தன. ஆறுமாதக் குழந்தையாயிருந்தபோது மூலம் வெளிவந்து உயிர் ஊசலாடிற்று. அப்போது சென்னையிலிருந்த சுரைக்காய் சாமியார் இடம் என்னைக் காட்டினார்கள். அவர் அருள் நோக்கு என்மீது பாய்ந்தது. ஒன்றும் வாய்திறவாது மூன்று விரல்களை நீட்டிக் காட்டினாராம். தாயும் தந்தையும் மூன்று நாளில் நான் மடிவேன் என்று எண்ணினார்களாம். மூன்றும் நாள் வெளிவந்த மூலம் தானே உள் சென்றுவிட்டது. அன்றுமுதல் இன்று வரையில் எனக்கு மூலநோய் தொடர்பு எவ்விதத்திலும் இல்லை. 1909ம் ஸு அர்த்தோதய புண்ணியகாலம் வந்தது. எல்லோரும் சமுத்திரஸ்நானம் செய்தோம். பிறகு திருமயிலைக் கபாலீசர் திருக்குளத்தில் மூழ்கினோம். எனது நிலையறியாது ஆழத்திலிறங்கினேன். நீர் குடித்து இருமுறை முழுகிவிட்டேன். மூன்றும் முறை மூழ்கும்போது, ஒருவர் மேலிழுத்துவிட்டார். 1922ம் ஸு திருக்கழுக்குன்றத்தில் சங்குதீர்த்தத்தில் வழக்கறிஞர் பலருடன் நானும் மூழ்கினேன். சறுக்கி விழுந்தேன். எனது நண்பரும் ஹைகோர்ட் ஜட்ஜ் சுந்தரமையர் புதல்வரும், இப்போது ஓய்வு பெற்ற ஜில்லா நீதிபதியாகத் திருமயிலையில் இருப்பவருமாகிய ஸ்ரீமான் P. S. சந்திரசேகரையர் என்னை இழுத்துக் கரையேற்றினார். 1949ம் ஸு மே, ஜூன், ஜூலை மாதங்களில் Typhoid நோயினால் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் கிடந்தேன். கண்டம் போன்ற ஒருநாள். அன்றிரவு பிழைக்க மாட்டேன் என்று எல்லோருக்கும் சொல்லிவிட்டேன். மருத்துவர்கட்கும் அதிக நம்பிக்கையில்லை. நல்லவேளையாக ஒரு கனக் கண்டேன். "முருகன் என்னை மயில்வாகனத்தின்மேல் ஏற்றிக்கொண்டுபோய், மறுபடியும்

இறக்கிவிட்டுப் போய்விட்டான்" என்று கண்ட கனவைச் சொன்னேன். எல்லாரும் தைரியம் பெற்றார்கள். அடுத்த நாளிலிருந்து நோய் விரைவில் குறைந்து வந்தது. எனது நண்பர் திரு. வி. க. இந்த கனவைக்கேட்டு "நல்லவேளை, முருகன் வந்தபடியால் விட்டுவிட்டுச் சென்றான். பரமசிவன் இடபவாகனத்தில் வந்திருந்தால் அழைத்தே போயிருப்பான்" என்று விளையாட்டாகச் சொன்னார்கள்.

17. **தந்தையும் மைந்தனும்** : எனது தந்தைக்கு நான் ஒருவனே புதல்வனாகையால், எனது கல்விக்கும் அறிவு வளர்ச்சிக்கும் வேண்டிய அளவிற்கு மேலாகவே பொருளுதவி செய்துவந்தார். ஒவ்வொரு மாதமும் நான் புத்தகங்கள் வாங்கிப் படிப்பதற்கென்றே ஐந்து ரூபாய் அனுப்புவார். இப்போது மூன்று ரூபா மதிப்புள்ள புத்தகங்கள் அப்போது ஐந்தணாவிற்குக் கிடைக்கும். Dickens, Thackeray, Scott முதலியோர் புத்தகங்கள் அனைத்தையும் வாங்கிப் படித்தேன். கல்லூரியில் முக்கியமான ஆராய்ச்சி நூல்களை ஒன்றுவிடாது வாங்குவேன். அப்போதேற்பட்ட நூல் வாங்கும் பழக்கம் என்னிடம் இன்றும் உள்ளது. எனது தந்தையார் பி. ஏ. வரையில் படித்தவராகையால் Shakespeare, Milton, Wordsworth, Tennyson, Scott, Longfellow, Coleridge முதலியோருடைய பாடல் தொகுதிகள் போன்ற பல புத்தகங்களை அவர் வாங்கி வைத்திருந்தார். இவைகளைப் படித்ததன் பயனாக எனக்கு மிக நன்றாக ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதும் பழக்கம் விரைவில் எற்பட்டது. S. S. L. C. பரீக்ஷை முடிந்தவுடன், மேல்படிப்பா அல்லது உத்தியோகமா எனது நாட்டம் எதில் என்பதை யறிய ஒருகடிதம் எழுதினார். இதற்குப் பதிலாகத் "தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து, முந்தியிருப்பச் செயல்", "மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்" என்ற திருக்குறட்பாக்களை யெழுதி, "தந்தை உதவியைச் செய்தால் மைந்தனும் தான்செய்யவேண்டியதைத் தவிராது செய்வான்" என்று குறித்தேன். இதைக்

கண்டவுடன் பெருமகிழ்ச்சியடைந்து, படித்ததுபோதும் என்று நான் சொல்லும் வரையில் படிக்க வைப்பதாக முடிவு செய்தார். அவ்வாறே நான் B.A., B.L. முடிக்கும் வரை உதவிசெய்தார். தந்தையாரைவிடப் பொருள் வருவாயில் மிக்கவர்கள் எல்லாம், தங்கள் புதல்வர்கட்கு உபகாரச் சம்பளம் (Scholarship) வாங்கித்தருவார்கள். எனது தந்தையார் இதற்கு ஒப்பவில்லை. "வேறொரு ஏழை மாணவனுக்குத் தேவையானதற்கு, நீ குறுக்கே நிற்காதே" என்பார். நான் பள்ளியிலும் கல்லூரியிலும் முழுச் சம்பளம் செலுத்தியே படித்தேன். எங்கள் வீட்டிலும் பன்னிருதிருமுறை, பதினன்கு சாத்திரம், தாயுமானர், இராமலிங்க அடிகள் பாடல்கள், திருப்புகழ், திருப்போரூர் சந்நிதிமுறை முதலிய பல புத்தகங்கள் இருந்தமையால் நூற்றுக்கணக்கான தோத்திரங்களைப் பதினைந்து வயதிற்குள் மனப்பாடம் செய்தேன். இது பிற்காலத்தில் எனக்குப் பேருதவியாயிருந்தது.

18. **மகாவித்வான் தணிகாசல முதலியார் சீடர் எந்தை :** மயிலாப்பூரில் எங்கள் வீட்டிற்கெதிர்வீட்டிலிருந்தவரே மகாவித்வான் தணிகாசல முதலியாராவார். அவர் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரிடம் பாடம் கேட்டவர், மிகத் திறமையாகச் சாத்திரபாடம் சொல்லும் ஆற்றல் உடையவர். எல்லோருக்கும் அவர் பாடம் சொல்லமாட்டார். சிவதீக்கை பெற்று, மரக்கறியுண்டு, நாடோறும் கோயில் வழிபாடு செய்வோர்க்கே பாடம் சொல்வார். இத்தகுதிகள் வாய்ந்த எமது தந்தையாருக்கு அவர் சிவஞான போதச் சிற்றுரை, சிவஞான சித்தியார், சிவப்ரகாசம், திருவருட்பயன் முதலியவற்றைப் பாடமாகச் சொன்னர். தந்தையார் எனக்கு இவற்றைப் பாடமாகச் சொன்னவகையில் நானும் ஆறுமுக நாவலர் சிஷ்யபரம்பரையில் இடம் பெற்றேன். தணிகாசல முதலியாருக்கு வடமொழிப் பயிற்சி நிரம்பவுண்டு. சித்தாந்த சாராவளி, சகலாகம சாரசங்க்ரஹம், அகோர சிவாசாரியார் நூல்கள், அஷ்டப்ரகரணம், நீலகண்டபாஷ்யம் முதலிய நூல்களைப்படித்தவர். அச்சுக்குவாராதன எனினும் தயங்காது எழுதிப்படித்தவர். அவ்வாறு அவர் எழுதியன சில,

தந்தையார் மூலமாக என்னிடம் வந்துள்ளன. வித்வான் சண்முகம் பிள்ளை, திரு. வி. க, விசுவநாதகுருக்கள், அரங்க சாமி நாயகர், வேறு பலர் அவரிடம் பாடம் கேட்டனர். தணிகாசல முதலியார் மிகமிக நுட்பமான சாத்திரக் கருத்துக் களை நன்கு விளக்கும் ஆற்றலுடையவர். அவர் 1918-ம் வருஷம் சிவபதம் அடைந்தார். அப்போது நான் வழக்கறிஞ ஞயினேன். ஆன சில மாதங்கட்குள் அவருடைய உயில் சாசனத்தை எழுதும் பேறு எனக்குக் கிடைத்தது.

19. **கல்லூரியில் நான்காண்டுகள்:** எனது தந்தையார் சென்னை மாகாணக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பு வரையில் படித்தவர். பி. ஏ. படிப்பை முடிப்பதற்கு முன் குடும்ப பாரத்தை மேற்கொள்ளும் நிலை வந்தமையால் படிப்பை நிறுத்தினர். என்னையும் அந்த மாகாணக் கல்லூரி யிலேயே சேரும்படி வற்புறுத்தினர். நான் 1911-ம் வருஷம் ஜூலை முதல், நான்காண்டுகள் அக் கல்லூரியிற் படித்தேன் இடை நிலை வகுப்பில் Mathematics, Physics, Chemistry என்ற பகுதியை எடுத்தேன். அப்போது கல்லூரித்தலைவர் E. W. Middlemast என்பவர். அவர் கணித ஆசிரியராகவும் இருந்தார். Physics பாடத்தின் தலைவர் R. Ll. Jones என்பவர், Chemistry தலைவர் W.E.Smith என்பவர். ஆங்கில பாடங்களை நடத்தியவர்கள் Mark Hunter, Mackintosh, S. E. Ranganadhan, K. V. Subbaiyar, K. Natesaiyar, D. S. Sarma, N. K. venkatesan முதலியவர்கள். அப்போது தமிழில் கட்டுரை மொழிபெயர்ப்புப் பாடமே உண்டு, வேறு தமிழ்ப் பாடமே கிடையாது. மஹாமஹோபாத்யாயர் உ. வே. சுவாமி நாதையர் தமிழ்ப் பண்டிதர். சேர்ந்தாற்போல, இரண்டு மணி நேரம் வாரத்திற்கொருமுறை இப் பாடம் நடக்கும். இதற்கு ஒரு மணி நேரம் போதும், மற்றொரு மணிநேரத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், பாரதம் முத லியவற்றில் சிறந்த பாடல்களைப் பற்றிச் சொல்லலாமா என்று ஐயரவர்கள் கேட்டதற்கு, அனைவரும் "சொல்லலாம் கேட்கிறோம்" என்றோம். ஐயரவர்களும் நூற்றுக்கணக்கான

பாடல்களிலுள்ள அருமைகளையெல்லாம் அருமையாகவே எடுத்துச் சொன்னார்கள். நுட்பமான இலக்கணக் குறிப்புக்கள் பலவற்றையும் எடுத்துச் சொல்வார்கள். ஓய்வு நேரங்களில் அவர்களுடன் சம்பாஷிப்பது மகிழ்ச்சியைத்தரும். தமிழ் மாணவர் சங்கத்தின் காரியதரிசியாக நான் இரண்டு ஆண்டுகள் இருந்தேன். வாரத்திற்கொருமுறை கூட்டம் நடக்கும். ஐயரவர்கள் தலைமையில் மாணவ மாணவிகள் பேசுவார்கள் (அக்காலத்தில் சென்னையில் ஒரு பெண் கல்லூரிகூட இல்லை) மாணவிகள் பேச்சை அதிகமாகப் புகழ்வார்கள். Chemistry பாடம் எனக்கு மிக நன்றாக வரும்: ஒரு பரீக்ஷையில் நூற்றுக்கு 85 மார்க்கு வாங்கினேன். விடைத்தாளை மதிப்பிட்ட ஆசிரியர் Dr. J. L. Simonsen என்பார் அதை வகுப்பிற் படித்துக் காட்டிப் புகழ்ந்தார். அவ்வாறே Mark Hunter என்பார் Shakespeare பாடத்தில் நான் நூற்றுக்குத் தொண்ணூறு வாங்கியதைப் புகழ்ந்தார். Intermediate பரீக்ஷை முடிந்தவுடன் Philosophy Honours எடுத்துக்கொள்ளும்படி பணித்த என் தந்தையின் சொற்படி முயன்றேன். Intermediateல் Logic எடுக்காதவர்கட்கு இடமில்லையென்றபடியால், B. A. Pass Course எடுத்து Mathematics and Physics பாடங்களோடு B. A. பரீக்ஷையில் மாகாண முழுமைக்கும் முதல்தானம் பெற்றுமுதல் வகுப்பில் தேறினேன். பல்கலைக் கழகத்தில் Cardozo Prize என்ற புத்தகங்கள் பரிசும் வழங்கப்பெற்றது. Intermediate பரீக்ஷையில் தமிழில் (மொழிபெயர்ப்பு கட்டுரை பாடத்தில்) முதலிடம் பெற்றதற்காக Norton Prize எனும் ரொக்கப் பரிசும் கிடைத்தது. பி. ஏ. பரீக்ஷையில் தேறியவுடன் ஆங்கில ஆசிரியர் மார்க்ஹண்டர் என்னை வரவழைத்து இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு சென்று படிப்பதற்கு அரசாங்கத்தில் உபகாரச் சம்பளம் வாங்கித் தருவதாகவும், பட்டம் பெற்றுத் திரும்பியவுடன் I. E. Sல் ரூ. 500ல் தொடங்கும் வேலை வாங்கித் தருவதாகவும் கூறினர். தந்தையார் (1914—1918) முதல் மகாயுத்த காலமாகையால் என்னை இங்கிலாந்திற்கனுப்ப

ஒப்பவில்லை. இங்கிலாந்திற்குச் செல்வோர் சிலர் ஆங்கில மாதர்களை மணந்து திரும்புகிற செய்திகள் சில அப்போது வெளிவந்தமையும் ஒரு காரணம் என்று தந்தையார் வெளியிட்டார்.

20. **சட்டக் கல்லூரியில் ஈராண்டுகள்:** சென்னை சட்டக்கல்லூரியில் 1915 ஜூலை முதல் 1917 ஏப்ரில் வரை படித்தேன். தலைவர் J. A. Davies என்பவர். ஆசிரியர்களுள் K. P. இலக்குமணராவ், C. குண்ணிராமன், பால் அப்பாசாமி முதலியோர் பிற்காலத்தில் உயர்நீதிமன்ற நீதிபதிகளாகவும், சிறு வழக்கு மன்றத் தலைவராகவும் பதவி பெற்றனர். அப்போது சட்டக் கல்வி மூன்று வருஷம் பயில வேண்டும் என ஒரு முயற்சி தோன்றிற்று. இதை எதிர்க்கும் முறையில் ஒரு நாள் மாணவர்கள் Strike செய்தோம். இந்த நிறுத்தத்தின் தலைவர்களுள் நானும் ஒருவன். அப்போது "நியூ இந்தியா" பத்திரிகை மிகப் பிரபலமாயிருந்து. அதை நடத்திய Annie Besant அம்மையாரைக் கண்டோம். அம்மையார் "உடனே கல்லூரிக்குச் செல்லுங்கள், நான் முயற்சித்துப் பழைய முறைக்கு ஆதரவு தருகிறேன்" என்றார்கள். பல கட்டுரைகள் வெளிவந்தன, பல்கலைக் கழகத்தில் பலமான எதிர்ப்புக் கஞ்சி, இரண்டாண்டுப் படிப்பே போதும் என்ற முடிவு காணப்பட்டது. B. L. பரீக்ஷையில் முதல் வகுப்பில் இரண்டாவதிடம் பெற்றேன். பார்ப்பனர் சூழ்ச்சியில் முதலிடமும் ஹிந்துலாமெடலும் பார்ப்பன மாணவர்கட்குச் சென்றதென்பதைத் தக்கார் மூலம் அறிந்தேன். இதைப் பற்றிக் கிளர்ச்சி செய்தல் நன்மை தாராது என்று தக்கார் தடுத்தமையால் ஒன்றும் செய்தேனில்லை.

21. **அல்லாடி கிருஷ்ணஸ்வாமி ஐயர் தொடர்பு:** நான் பி. எல். பரீக்ஷை முடிவு தெரிவதற்கு முன்பே, அல்லாடி கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கட்கு ஒரு கடிதம் எழுதினேன். அதில் நான் பி. ஏ., பரீக்ஷையில் மாகாண முதல்வன் நிலையில் தேறிய செய்தி, பி. எல். பரீக்ஷையில், அவ்வாறே தேற எதிர்பார்க்கும் செய்தி, பார்ப்பனன் அல்லாத என்னைத்

தமது apprentice ஆக எடுத்துக் கொள்வது தமக்கே புகழளிக்கும் எனும் செய்தி முதலியவற்றைத் துணிவாக விவரித்தேன். இக்கடிதம் பெற்ற மறுநாளே ஐயாவர்கள் எனது துணிவிற்கு வியந்து என்னைத் தமது apprentice ஆக எடுத்துக் கொள்வதைத் தெரிவித்தார்கள். பிறகு வேறு நண்பர்கள் சிலரும் சிபார்சு செய்தார்கள். நான் 1917-ஆம் வருஷம் ஆகஸ்ட் முதல் 1918-ஆம் வருஷம் ஆகஸ்ட் வரையில் ஐயாவர்களிடம் பயிற்சி பெற்றேன். என்னிடத்தில் அதிக நேயத்தோடு வழக்குக் கட்டுக்களைக் கொடுத்து, எவ்வாறு படித்து எவ்வாறு பெரிய வக்கீல்களுக்குத் துணை செய்தல் வேண்டும் என்பதையெல்லாம் சொன்னார்கள். தாம் P. R. சுந்தரமையரிடம் பயின்ற முறைகளை விவரமாகச் சொன்னார்கள். மிக ஏழ்மை நிலையிலிருந்து தாம் முன்னிற்கு வந்த வரலாற்றை ஆதியோடந்தமாகச் சொன்னார்கள். நான் 12—8—1918-ல் வக்கில் ஆன பிறகு சுமார் 15 ஆண்டுகள் வரையில் தமது ஜூனியர் வக்கீலாக என்னை வைத்துக் கொண்டு, முக்கியமான பல பெரிய வழக்குக்களில் எனக்கு வக்காலத்தும் பீசும் வாங்கித் தந்து உபகரித்தார்கள். வெகு சீக்கிரத்தில் வக்கில் உலகத்தில் எனக்கு நல்ல பேர் கிடைத்தது. வெளியூர் நீதிமன்றங்கட்கு என்னை அழைத்துச் செல்லும் பேறும் கிடைத்தது. சென்னை ஹைகோர்ட்டில் ஜஸ்டிஸ் கூட்ஸ் ட்ராட்டர் கோர்ட்டுக்குப் போய் பேசுவதற்குப் பலர் பயப்படுவார்கள். ஐயாவர்கள் தாம் வர இயலாத நிலையில் ஒரு வழக்கில் அந்த நீதிபதியின் முன்னர் என்னையே பேசும்படி பணித்தார்கள். நான் மிக அழகாகப் பேசி வெற்றிபெற்றேன். அன்று முதல் பல வழக்குக்களில் என்னையே பேசும்படி பணித்தார்கள். இவ்வகையில் எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார், டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர் முதலியவர்களுடைய தொடர்பும் எனக்குக் கிடைத்தது. எனது ஒத்த வயதுடைய வக்கில் நண்பர் பலருக்கு இது பொறாமையைக்கூட விளைவித்தது. நான் நடத்திய வழக்குக்கள் பல மதராஸ் லா ஜர்னல், ஐ. எல். ஆர். மதராஸ், லா வீக்லி முதலியவற்றில்

வெளியாயின. நாளடைவில் சமயத்துறையில் எனக்கேற்பட்ட ஊக்கத்தின் மிகுதி, உறங்கினவன் கையில் பாக்கு தானாக நெகிழ்வதுபோல், சட்டத் துறையை நெகிழச் செய்தது. கடைசியாக வக்கீல் முறையில் ஒரு கட்சிக்காரருக்காக நான் நீதிமன்றம் சென்றது 1940-ஆம் வருஷம்.

22. **ஒழுக்க நெறி நிற்றல்:** கல்லூரியில் பயிலும் போது, கோடை விடுமுறையில் நீலகிரியில் சில நண்பர்களோடு நான் walking செய்தேன். அப்போது எதிரில் ஒரு purse காணப்பட்டது. அதில் முப்பது ரூபாயும் சென்னைக்கு ஒரு முதல் வகுப்பு ரயில் ரிட்டர்ன் டிக்கெட்டும் இருந்தன. ரூபாயை எடுத்துப் பங்கிட்டுக் கொள்ளலாம் என்று நண்பர்கள் கூறினார்கள். நான் அதற்கு ஒப்பவில்லை. போலீஸ் நிலையம் சென்று அதைப் பதிவு செய்யவேண்டும் என்றேன். எங்கள் விலாசத்தைக் கொடுத்துப் பதிவு செய்தோம். அடுத்த நாள் ஒரு வெள்ளைக்கார மாது எங்களைத் தேடிவந்து, பரிசு தருவதாகக் கூறினாள். எங்கள் கடமையைத்தானே செய்தோம், பரிசு வேண்டாம் என்றோம். அவள் ஒப்புக்கொள்ளாமல், பல கைகுட்டைகளையும் தின் பண்டங்களையும் வாங்கித் தந்து நன்றி செலுத்தினாள். எனது திருச்சிராப்பள்ளி நண்பர் ஒருவர் எனக்கனுப்பிய புத்தகம் ஒன்றில் பத்து ரூபாய் நோட்டுக்கள் ஐந்திருப்பதைக் கண்டேன். அவருக்குக் கடிதம் எழுதினேன். அப்புத்தகத்துள் வைத்ததைத் தாம் மறந்துவிட்டதாகச் சொல்லி, அத்தொகையை ஏதேனும் ஒரு நூல் வெளியிடப் பயன்படுத்துமாறு விரும்பினார். சமாஜ வெளியீடாகத் திருமுருகாற்றுப்படை உரைப்பதிப்பொன்று வந்தது. இத்தகைய நிகழ்ச்சிகள் வேறு சில உண்டு. விரிவஞ்சி விடுத்தாம்.

23. **சைவ சித்தாந்த மகா சமாஜத் தொடர்பு:** எனது தந்தையாரும் நானும் 1916-ம் ஆண்டு மயிலாப்பூரில் நடந்த சமாஜ ஆண்டு நிறைவு விழாவிற்குச் சென்றோம். யாழ்ப்பாணத்திலிருந்து வந்த முதலியார் சபா ரத்தினம் தலைமை வகித்தார். அப்போது திரு. கி. குப்புச்சாமி முதலியார் காரியதரிசியாக இருந்தார். தந்தையாரைக் கணித

பரிசோதககராகத் தேர்ந்தெடுத்தார்கள். அதுமுதல் தந்தையாருக்குச் சமாஜத் தொடர்பேற்பட்டது. 1921-ம் ஆண்டில், சென்னை பச்சைப்பன் கல்லூரியில் சமாஜ ஆண்டு நிறைவு விழா நடந்தது. அதில் என்னைக் காரியதரிசியாக ஒப்புக்கொள்ளும்படி திரு. கி. குப்புச்சாமி முதலியார் மன்றுடிக் கேட்டார். எனது தந்தையாரும் ஒப்புக்கொள்ளும்படி கட்டளையிட்டபடியால் நானும் ஒப்புக்கொள்ள நேரிட்டது. அப்போது சித்தாந்தம் பத்திரிகை நின்று ஓராண்டாயிற்று. சமாஜக்கணக்கில் பொருள் வலிவு ரூபா அணு பை எல்லாம் பூஜ்யம். அது முதலாகப் பலவகை முயற்சிகள் செய்து, பெயரளவில் ஆண்டு விழாவை மட்டும் நடத்தி உயிர்போகும் நிலையிலிருந்த சமாஜத்திற்குப் புத்துயிரளித்து, அதை வீறு பெற்றெழச் செய்து அடக்கவிலைப் பதிப்புக்களாகத் தேவாரம் முதலிய பன்னிரு திருமுறைகளையும், பதினன்கு சாத்திரம், திருப்புகழ், சங்க இலக்கியம், சீவக சிந்தாமணி முதலிய நூல்களையும் பல்லாயிரக்கணக்கில் வெளியிடுதற்கு அல்லும் பகலும் இடைவிடாதுழைத்தேன். வெளிவந்த நூற் பிரதிகள் ஒரு நூருயிரத்திற்கு மேலாகவே இருக்கும். இறந்துபோன சித்தாந்தம் பத்திரிகை மீண்டும் 1928ஞு ஜனவரியில் உயிர்பெற்றெழுந்து, இதுகாறும் நடந்து வருகிறது. குப்புச்சாமி முதலியார் போக்கு பிடிக்காமல் விலகியிருந்த திரு. வி. சகோதரர்கள், சச்சிதாநந்தம் பிள்ளை முதலிய பலரையும் மீண்டும் சமாஜத் தொடர்பு கொள்ளச் செய்தவன் நானே. ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளைப் பல முறை சென்னைக்கு வரவழைத்து, சமாஜத்திற்கும் பத்திரிகைக்கும் ஆக்கம் தேடி, நெல்லை முதலிய பல இடங்கட்குச் சென்று பத்திரிகை வளர்ச்சிக்கும் நூல் வெளியீடுகட்கும் பொருள் சேர்க்கும் தொண்டிலும் ஈடுபட்டேன். இருபத்திரண்டாண்டுகள் காரியதரிசியாகவும், மூன்று முறை பத்திராசிரியனுகவும் இருமுறை ஆண்டு விழாத் தலைவனுகவும் பணி செய்தேன். 1943 டிசம்பரில் நான் காரியதரிசிப் பணியிலிருந்து விலகும்போது சமாஜம் மிக நல்ல செல்வநிலையிலிருந்தது. சமாஜத்தோடு இவ்வளவு நெருங்கிய தொடர்பு

வேறு எவருக்கும் இல்லையென்பதை எவரும் மறுக்க இயலாது.

24. **திருமணமும் மணலி முதலியார் வீட்டு உறவும்:** மேலே 14-ம் பிரிவில் கூறப்பட்ட எனது அம்மான் இராஜகோபால முதலியார் மணலியார் வீட்டு மருமகப் பிள்ளை. தமது மனைவி உருக்குமிணியம்மாளின் அண்ணன்மார் இருவர் சரவண முதலியார் கிருஷ்ணசாமி முதலியார் என்பவர்கள். தமது தங்கை இரத்தினம்மாளைக் கிருஷ்ண சாமி முதலியாருக்குத் திருமணம் செய்வித்தார். இரத்தினம்மாள் எனது தாயாரின் தங்கையாகையால், அந்தத் திருமணத்திலிருந்தே மணலியார் வீட்டுத் தொடர்பு ஒரு வகையில் ஏற்பட்டது. மணலி சரவண முதலியாருடைய மூத்த புதல்வியைத் தமது புதல்வன் ஏகாம்பரத்திற்கும், இளைய புதல்வியை எனக்கும் திருமணம் செய்வித்தல் வேண்டுமென்று இராஜகோபால முதலியார் தமது மைத்துனர் சரவண முதலியாரிடம் சொல்லிவைத்திருந்தார். இவ்விரு திருமணங்களையும் அவர் உயிருடன் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. ஆனால் அவர் ஏற்பாட்டின்படியே சரவண முதலியார் செய்து முடித்தார். வெவ்வேறு உறவினர்கள் தங்கள் தங்கள் பெண்களைக் கொடுக்க எண்ணினபடியால், இவ்விரு திருமணங்களும் நடக்கவொட்டாமல் பற்பல தடைகள் செய்து தோல்வியடைந்தனர். சரவண முதலியாரும் அவருடைய தங்கை உருக்குமிணியம்மாளும் ஒரே உறுதியாக முதலில் செய்த ஏற்பாட்டின்படியே செய்து முடித்தனர். ஏகாம்பரம் திருமணம் 1920-ம் ஆண்டு நடந்தது. திருமணம் முடிந்த அடுத்த வருஷமே அவர் சிவபதமடைந்தபடியால், தமது மருமகனை இழந்த சரவண முதலியார் துக்கக்கடலில் ஆழ்ந்து, சிறிது தேறி, இளைய புதல்வியின் திருமணத்தை நடத்த, ஐந்தாண்டுகள் ஆயின. நான் S.S.L.C. பரீக்ஷையில் தேறிய நாளிலிருந்தே பற்பலர் தத்தமது பெண்களைக் கொடுக்க முயன்றனர். இவர்கட்கெல்லாம் தக்கவாறு பதில் கூறுவது எனது தந்தையாருக்குப் பெரியதொரு

தொல்லையாக இருந்தது. என்றாலும் காலம் தாமதமாவதற்குரிய காரணமும் இருந்தது.

25. **அலர்மேல்மங்கைபுரத்தில் திருமணம்:** மூத்த புதல்வியின் நிலை வருந்தத்தக்கதாயினபடியால், இளைய புதல்வியின் திருமணத்தைத் திருப்பதி அலர்மேல்மங்காபுரத்தில் நடத்துவதென்று சரவணமுதலியார் பிரார்த்தனை செய்து கொண்டனர். அவ்வாறே ஏற்பாடு செய்தனர். புரோஹிதர்களைக்கொண்டு 1926-ம் ஆண்டு (அக்ஷய ஹூ) சித்திரை மாதத்தில் ஒருநாளும் வைகாசியில் ஒருநாளும் பார்க்கப்பட்டன. எனது தந்தையார் தமக்கு வைகாசியில் மாரகதசையிருப்பதால் சித்திரையிலேயே நடத்துதல் வேண்டுமென்று வற்புறுத்தினர். அவ்வாறே சித்திரையில் ஒரு நாள் (25—4—1926) ஏற்பாடு செய்யப்பெற்றது. அன்று வைதிக முறைப்படி திருமணம் நடைபெற்றது. மூன்று வேளை ஔபாசனமும் 27—4—1926-ல் காப்பவிழ்த்தலும் நிகழ்ந்தன. அடுத்தநாள் அனைவரும் திருவேங்கடமலையேறி, மயிர் நீக்கிப் பிரார்த்தனைகள் செலுத்தினோம். திருவேங்கடமுடையானுக்கு வைரமுடி ஸமர்ப்பித்துத் திருக்கல்யாண உத்ஸவம் செய்தோம். திருமலையில் மூன்றிரவு வாசம் செய்துவிட்டுப் பிறகு சென்னை சேர்ந்தோம். சென்னையில் பெண் வீட்டிலும் பிள்ளை வீட்டிலும் கிரஹப்ரவேசம், கச்சேரி, விருந்து முதலியன சிறப்பாக நடந்தன.

26. **தந்தையார் சிவபதமடைதல்:** தாம் கூறிய படியே தந்தையார் மாரகதசை விரைந்து வந்தது. திருப்பதி மலைமேலிருக்கும்போதே, வலதுகை விரல் ஒன்றில் ஒரு கட்டி கிளம்பிற்று. இந்த கட்டியே தன்னைக் கொல்லும் என்றார் தந்தையார். நீர் வியாதிக்காரராகையால், அது நாளுக்குநாள் அதிகநோய் தந்தது. டாக்டர் C. R. கிருஷ்ணசாமி கட்டியையறுத்து ரணசிகிச்சை செய்தார். ரணம் ஆறவில்லை. தந்தையார் பூரண ஞாபகத்தோடு கடைசி நிமிஷம் வரையில் தேவாரம் பாடிக்கொண்டிருந்து திருநீறணிந்து உயிர்விட்டார். அவர் அடைந்த நாள் வைகாசிப் பூசமாகிய சேக்கிழார் திருநாள். எனது தாயார் அதற்கு ஏழாண்டுகள்

முன்னரே (1919-ம் ஆண்டு) சிவபதம் அடைந்தனர். தாயும் தந்தையும் நான் முற்கூறியபடி நல்ல சிவபக்தியுடையவர்கள். தாயார் காசி விசாலாக்ஷியம்மனுடைய விக்கிரகம் ஒன்றை நாடோறும் பூசிப்பவர். தந்தையார் நாடோறும் பிள்ளையார் பூசையும் சிவபூசையும் செய்வதோடு, திருக்கபாலீச்சரம் சென்று அர்த்தஜாம பூசை தரிசிப்பவர். பெங்களூர் நீலகிரியிலிருந்த காலத்திலும் விடுமுறை பெற்று, ஆண்டுதோறும் பங்குனிப் பெருவிழாவிற்கு வந்துவிடுவார். நீலகிரியில் மார்கழி மாதக் குளிரிலும், எதிரில் நெருப்புச்சட்டியில் கைகளைக் காட்டிக்கொண்டும், நார்மடியொன்றைப் போர்த்துக்கொண்டும், சிவபூசையையும் மாலை வழிபாட்டையும் முறைப்படி தவிராது நடத்துவார். உத்தியோக தோரணையிலேயே இருமுறை வடநாட்டில் காசி, கயை, பிரயாகை முதலிய தலங்களையும் தரிசித்துப் பிதுரர் வழிபாடு செய்தார். தெற்கே மதுரை இராமேசுவரம் முதலிய தலங்களையும் தரிசித்தார். தென்னிந்திய இருப்புப்பாதை சென்னையிலிருந்து சிதம்பரத்திற்குப் போடப்படுதற்கு முன்னரே, மாட்டுவண்டித்தொடரில் ஏழு நாள் பிரயாணம் செய்து சிதம்பரம் ஆருத்ரா தரிசனம் செய்தார். வரும்போது வடலூரில் இறங்கி இராமலிங்கசுவாமிகளை நேரில் தரிசித்து வந்தார். தொழுவூர் வேலாயுத முதலியாரால் வெளியிடப்பட்ட திருவருட்பா பிரதிகளை அவ்வப்போது வாங்கிப் படித்தார். இப்போதும் அவை என்னிடம் உள்ளன.

27. **தந்தையாருக்கு நான் கொடுத்த உறுதி மொழிகள் :** தந்தையார் பத்தொன்பதாம் நூற்றாண்டில் திகழ்ந்த சைவ ஒழுக்கம் உடையவர். நான் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய பல திருத்தங்களில் ஈடுபட்டவன். இது அவருக்குப் பிடிக்கவில்லை. எனவே என்னிடமிருந்து பல உறுதிமொழிகளை அவர் பெற்றார். அவற்றை இன்றுவரையில் நான் காப்பாற்றி வருகிறேன். அவ்வுறுதிமொழிகளுட் சில கீழ்வருவன:—(1) வீட்டில் ஒரு பூசையறை வைத்து, அதில் தாம் வழிபட்ட திருவுருவங்கள் படங்கட்கு நாடோறும் பூசை செய்தல். (2) திருமயிலைக் கபாலீச்சரத்தில் வெள்ளிக்

கிழமை, கிருத்திகை முதலிய விசேஷ நாட்களில் மூன்று தலைமுறையாக நடந்துவரும் அர்ச்சனைகளை விடாது செய்தல். (3) தாய்தந்தையர்கட்கு அமாவாசை தர்ப்பணமும், வருஷ சிராத்தங்களும் செய்தல். (4) வீட்டில் விநாயகர் சதுர்த்தி முதல் அடுத்த விநாயகர் சதுர்த்தி வரையில் மாதம்தோறும் நடைபெறவேண்டிய விசேஷ விரதங்களை வழக்கம்போல் அனுஷ்டித்தல். (5) நெருங்கிய உறவினர் வீடுகளில் நடக்கும் சுபாசுபங்கட்குச் சென்று வழக்கம்போல் மரியாதையும் பந்தி போஜனமும் செய்தல். (6) கூடிய வரையில் மிகுதியாகச் சைவ சமய வளர்ச்சிக்கு உழைத்தல். வேறு சிற்சிலவற்றிற்கு நான் உடன்படாது மறுத்தேன். அவை (1) ஜாதி வேறுபாடு கருதி உடனுண்ணாமை. (2) தாழ்ந்த வகுப்பினரைத் தீண்டாமை. (3) தகுதி கருதாது பார்ப்பனர்கட்கு வணக்கம் செலுத்துதல். (4) தகுதி கருதாது காஷாயதாரிகட்கு வணக்கம் செலுத்துதல். (5) அன்னதானம் கோயில் திருப்பணி முதலியவற்றிற்கு வசூலிப்பவர் தகுதி கருதாது பொருள் ஈதல். (6) பரம்பரைச் சைவ வேளாள மரபினர்க்கே வீட்டில் பந்தி போஜனம் செய்வித்தல், ஏனையோருக்கு இலையில் வைத்தளித்தல்.

28. **தந்தையார் யோகப்பயிற்சி :** எனது தகப்பனாருக்கு அஷ்டாங்க யோகப் பயிற்சியில் சிறிது விருப்பம் உண்டு. திருமூலர் திருமந்திரத்தில் பல பாடல்களை இடைவிடாது படிப்பார். சுவாமி விவேகாநந்தர் சென்னையில் நிகழ்த்திய சொற்பொழிவுகளைக் கேட்டு அவர் வெளியிட்ட யோக நூல்களை அவ்வப்போது வாங்கிப் படிப்பார். எங்கள் உறவினர் ஒருவர் சஞ்சீவி முதலியார் என்பவர் நல்ல யோகப் பயிற்சியுடையவர். அவரிடம் யோகாசனங்கள் சிலவற்றைக் கற்றுக்கொண்டு அதிகாலையிற் பயில்வார். அவர் சொல்லிய சில பஸ்மங்களையும் கல்பங்களையும் தாமே கஷ்டப்பட்டு முறைப்படி தயாரிப்பார், நெய்யினும் தேனினும் கலந்து உண்பார். "இருக்க வேண்டுமானால் இரும்பைத்தின், போக வேண்டுமானால் (அல்லது போகம் வேண்டுமானால்) பொன்னைத்தின்" என்று தமது யோககுரு சொல்வதை எடுத்துச்

சொல்வார். தங்க பஸ்மத்தைவிட அயக்காந்த பஸ்மத்தின் மேன்மையை இவ்வாறு விளக்குவார். "உனக்கு யோகப் பயிற்சியே வேண்டாம்" என்று என்னிடம் சொன்னார். நானும் அதில் சிறிதும் ஈடுபடவில்லை.

29. **அரசியலில் எனது தொண்டு:** இளமையிலிருந்தே எனக்கு அரசியலில் பற்றுண்டு. அரசாங்க அலுவலில் இருந்தபோதிலும் (A. D. S. & T. Office)ல் ஏறக்குறைய முப்பதாண்டுகள் எழுத்தாளராயிருந்து ஓய்வும் உபகாரச் சம்பளம் எனும் (pension)ம் பெற்றவராயினும் அரசியல்வாதிகள் சொற்பொழிவுகளைக் கேட்பார் எனது தந்தையார், என்னையும் அழைத்துச் செல்வார். கடற்கரையில் பெபின்சந்திரபால் இடிமுழக்கம்போல் நிகழ்த்திய சொற்பொழிவுகளைக் கேட்டோம். சூரத்து காங்கிரசில் பாலகங்காதரதிலகர் வீரச்செயல்களைப் புகழ்வார், பஞ்சாபில் லாலா லஜபதிராய் போராட்டத்தை மெச்சுவார், வங்காளத்தில் அரவிந்தகோஷ் நிகழ்த்திய தீரச்செயல்களில் கவனம் செலுத்துவார். கோகலே முதலிய மிதவாதிகள் போக்கு அவருக்குப் பிடிப்பதில்லை. எனக்கும் அவர் கொள்கையே சரி என்று தோன்றியது. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரிடம் பயிற்சி பெற்றது முதல், ஒத்துழையாமை இயக்கம், தீவிரவாதம் முதலிய (மகாத்மா காந்தியடிகள் தொடங்கிய) வற்றில் ஈடுபட்டேன். வேலூருக்கு ஒரு வழக்குக்காக நானும் அல்லாடி கி. ஐயரும் இருமுறை சென்றபோது சி. ஆர். அவர்களையும் வேறு பலரையும் (Central Jail)ல் பார்த்தோம். அப்போது அரசியல் குற்றவாளிகளுள் ஏ., பி., சி. எனும் தரவேறுபாடு கிடையாது. எல்லோருக்கும் கேழ்வரகுக் களியும் குழம்புமே தரப்படும். 1930-ம் ஆண்டில் சென்னை சட்டசபையிலிருந்து காங்கிரசு அங்கத்தினர் வெளியேறினர். அவ்வாறு வெளிவந்தவர்களுள் ஒருவர் முத்துரங்கமுதலியார். அவர், சுணும்பேட்டை ஜமீன்தார், சத்யமூர்த்தி முதலிய நண்பர்களுடன் வந்து, தாம் காலி செய்துள்ள ஸ்தானத்திற்கு என்னை நிற்கும்படி கேட்டுக்கொண்டார். காங்கிரஸ்

மெம்பர்களெல்லாம் வெளியேறும் வேளையில், அதே கொள் கையுடைய நான் உள் நுழைவது சிறிதும் பொருந்தாதென் றேன். காங்கிரஸ் கொள்கையில் பகைமையுணர்ச்சி யுள்ளவர் கள் நுழைவதைவிட, அனுதாப உணர்ச்சியுடையவர்கள் நுழை வது நல்லதென்று வாதித்தார்கள். அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் முதலியவர்களும் நான் சட்டசபைக்குள் செல்வதை விரும்பினார்கள். நானும் எவ்வித போட்டியுமின்றி சட்ட சபை உறுப்பினனாயினேன், 1930-ம் ஆறு ஜனவரி முதல் ஒன்பது மாதங்கள் உறுப்பினனாயிருந்தேன். காங்கிரஸ் காரர்கள் வெளியேறிவிட்டபடியால், அந்தக் கட்சித் தலைவர் களாய் அக்காலத்திலிருந்த சாமி வேங்கடாசலம் செட்டியார், சத்தியமூர்த்தி, முத்துரங்க முதலியார் கேட்கக்கூடிய கேள்வி கள் கொண்டுவரக்கூடிய தீர்மானங்கள் முதலியவற்றை நானும் வேறு ஒரு சிலருமே செய்யவேண்டி வந்தது. அவ் வாண்டு வரவுசெலவு திட்டத்தில் பற்பல (Cut motion) களைக் கொண்டுவந்தேன். இவைகளைப் பற்றி, தினசரிப் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக எனது பேச்சு வெளியிடப் படும். அக்காலத்தில் அரசாங்கத்தை நடத்திய மந்திரிகளும் பெரிய உத்தியோகஸ்தர்களும் தக்கவாறு பதிலளித்தார்கள். நான் செய்த அரசியல் தொண்டு எல்லோராலும் புகழப்பெற் றது. அப்போது உப்பு சத்தியாக்கிரகப் போரும் தீவிரமாக நடந்தது. கடற்கரையில் உப்புக் காய்ச்சுவதற்கு ஆயிரக் கணக்கான மக்கள் சென்றார்கள். துர்க்காபாய் முதலிய பெண் தொண்டர்களும் சென்றார்கள். அரசாங்கத்தார் உத்தரவின் பேரில் போலீஸ் படையினர் அடித்தும் பிடித்தும் பலமான காயம் விளைவித்தும் இயக்கத்தை வெல்ல முயன்றனர். இவ் அட்டூழியத்தைத் தீர விசாரித்து ஒரு அறிக்கை தருதற்காக சென்னை மஹாஜன சபையினர் என்னையும் பிரபல வழக் கறிஞர்களாயிருந்த டி. ஆர். இராமச்சந்திர ஐயரையும், பப்பு சோமசுந்தரத்தையும் நியமித்தனர். நாங்கள் துர்காபாய் (இப்போது துர்காபாய் தேஷ்முக் என்பார்) முதலியோரை விசாரித்து அறிக்கை விடுத்தோம். வேறு பற்பல கூட்டங் களிலும் அரசாங்கத்தார் போக்கைக் கண்டித்தேன்.

30. **பொதுத் தேர்தலில் தோல்வி:** பொதுத் தேர்தல் 1930 செப்டம்பரில் நடந்தது. காங்கிரசில் சட்டசபை பஹிஷ்காரம் அமுலில் இருந்தது. எனவே முத்துரங்க முதலியார், சத்தியமூர்த்தி, சூணும்பேட்டார் முதலியவர்கள் என்னைத் தேர்தலுக்கு அபேட்சகனாக நிற்கும்படி வற்புறுத்தினர். எனக்குச் சட்டசபைவேலை ஒரு பெரிய நாடகமாகவே தோன்றியது. எனினும் பல பெரியார்கள் வேண்டுகோளை மறுக்கும் ஆற்றலின்மையால் ஒப்புக்கொண்டேன். என்னாலியன்ற ஒரு சிறு தொகையைத் தேர்தல் செலவிற்காகக் கொடுத்தேன். என்னுடைய (election agent) ஆக இப்போது மந்திரி-பதவி வகிக்கும் திரு. எம். பக்தவத்ஸலம் அவர்கள் தொண்டு செய்தார். அவரும் முத்துரங்க முதலியாரும், சூணும்பேடு ஜமீன்தாரும், செய்யூர் முத்தையா முதலியாரும், எம். கே. ரெட்டியார் முதலிய பலரும் தீவிரமாக உழைத்தனர். எதிர்க்கட்சியினர் ஏராளமாகச் செலவு செய்தனர். 99 வோட்டுகள் குறைந்தமையால் எனக்குத் தோல்வியே கிடைத்தது. அதற்கு நான் சிறிதும் வருந்தவேயில்லை. வழக்கறிஞன் தொழிலுக்கும் சமாஜத் தொண்டிற்கும் சட்டசபை வேலை இடையூறாகவே இருந்தது. பிறகு அரசியல் துறையில் நான் புகுந்து எவ்வித வேலையும் செய்யவேயில்லை. காங்கிரஸ் இயக்கத்திற்குப் பொதுவாக அனுதாபம் காட்டிவந்தேன், இன்றும் காட்டி வருகிறேன்.

31. **இல்லற வாழ்க்கை:** எனது மனைவியின் இயற்பெயர் பார்வதியம்மாள். வழங்கும் பெயர் சுலோசனம்மாள். ஒன்பதாம் இடத்தில் குரு இருப்பதால் நல்ல ஜாதகம் என்றார் எனது தந்தையார். வேறு சிற்சில பொருத்தங்களையும் எடுத்துக் கூறினர். புத்திரப்பேறு விஷயத்தில் திடமாகக் கூற இயலாதென்றார். நாங்களிருவரும் அதைப்பற்றி என்றும் கவலைப்பட்டதேயில்லை. ஞானியார் சுவாமிகள் முதலிய பலர் கந்தர்சஷ்டி விரதம் மேற்கொளல், இராமேசுவரத்தில் நாகப்பிரதிஷ்டை செய்தல் முதலியவற்றைச் சொன்னார்கள். எங்களுக்கு இவைகளில் நாட்டம் விழவில்லை. இறைவன்

வகுத்த திட்டத்திற்கு மாருக ஒன்றும் செய்ய நாங்கள் என்றும் விரும்பவில்லை. வயிற்றிற் பிறந்த பிள்ளைகளும் பெண்களும் எங்களுக்கு இல்லையாயினும், எங்கள் நெருங்கிய உறவினர் நண்பர்கள் வீட்டுப் புதல்வர் புதல்வியர்களையெல்லாம் நாங்கள் உண்மையாகவே நேசிக்கிறோம். அவர்கள் வீடுகட்குச் செல்லுங்கால் அவர்களும் எங்களை அவ்வாறே பாராட்டுகின்றனர். பல இளைஞர்கள் உயர்நிலைப் படிப்பிற்காக எனது இல்லத்திலேயே தங்கி, எனது புதல்வர்களைப் போலவே நடந்து கொள்ளுகிருர்கள். இதனினும் பெரிய பேறு வேறென்ன வேண்டும்? சில இடங்களில் பிள்ளைகள் செய்யும் தீமைகட்காக வருந்தும் தந்தையரை நான் பார்க்கிறேன். சில இடங்களில் பிள்ளைகளும் பெண்களும் நல்ல தொண்டுசெய்து நல்வாழ்க்கை நடத்துவதைக் கண்டு இன்புறுகின்ற பெற்ருேரையும் நான் பார்க்கிறேன். சில நண்பர்கள் இல்லங்களில் சமையலறைக்குள்ளும் செல்கின்ற உரிமை எனக்குண்டு. பலர் என்னை "அப்பா, அப்பா" என்றே அழைக்கிருர்கள். இதுவே போதாதோ?

32. **சுகாதார நிலை:** எனது பெற்ருேர்கள் ஒரு தனிப் புதல்வனுகிய எனது சுகாதார நிலையைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார்கள். காரமும் புளிப்பும் அதிகமில்லாத உணவையே நான் இளமையிலும் பிறகு எப்போதும் உண்ணுவதுண்டு. இரவில் குழந்தைப் பருவம் முதற்கொண்டு நாளது வரையில் பாற்சோறும் பழமும் சாப்பிடுவதைத் தவிர வேறு காரசாரப் பொருளைச் சேர்ப்பதேயில்லை. இந்த சாத்துவிக உணவு, இரவில் நல்ல உறக்கத்தையும், காலையில் சிக்கலில்லாத மலப்போக்கையும் இயல்பாகவே அளிக்கும். எடை போட்டு உண்பதுபோலவே, ஒரு பிடி அதிகமாக உண்பதில்லை. சில இடங்களில் விருந்தினனுகச் செல்லுங்கால், உபசரிப்பவர்கள் தொந்தரவுக்கிணங்கி ஒரு சிறிது அதிகமாகச் சாப்பிடும்போதெல்லாம், அஜீர்ணத்தால் நான் கஷ்டப்படுவதுண்டு. அதற்கு வேறு மருந்து அருந்தாமல், அடுத்தவேளை உணவில் இஞ்சிபெருங்காயம் துவையலையும், மிளகு சீரகம் குழம்பையும் உபயோகித்து, அளவையும்

குறைத்து உண்டு அஜீர்ணத்தைப் போக்கிக்கொள்வேன். வாரந்தோறும் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யத் தவறுவதில்லை. ஆண்டுக்கிருமுறை நேர்வாள மாத்திரை உட்கொண்டு உடம்பைச் சுத்தி செய்துகொள்வது வழக்கம்.

33. **பெண்மக்களோடு பழகுதல்:** சமாஜத்தொடர்பு கொண்ட சில பெண்மணிகளைக் கண்டு, சொற்பொழிவு, கட்டுரை முதலியனபற்றித் திட்டம் செய்யவேண்டிய பொறுப்பு, சமாஜக் காரியதரிசி எனும் முறையில் எனக்கிருந்தது. அப்போதெல்லாம், வயதுமுதிர்ந்த எனது நண்பர் திரு. கி. குப்புசாமி முதலியாரவர்களோடு செல்வேன். தனியே செல்வதில்லை. அவரே எல்லாம் பேசி முடிப்பர். நான் பேசுவதுகூட மிகையென்றெண்ணி வாளா இருப்பேன். அவர் 1935-ல் இறையடி சேர்ந்த பிறகே, நான் அவர்களிடம் நேரிற் செல்வேன். பல ஆண்டுகளாகப் பழகியபடியால் அவர்களும் தடையின்றிப் பேசுவார்கள். எனது மனைவியைத் தவிர வேறு எந்த பெண்மணியையும் காதலுணர்ச்சியோடேனும் காமக் கண்கொண்டேனும் பார்த்ததில்லை. பலமுறை பழகும் வரையில் அவர்களுடைய கால் விரல்களைப் பார்த்துத் தலைகுனிந்து பேசுவேனே தவிர, அவர்கள் முகத்தை உற்றுப் பார்த்துப் பேசியதில்லை. இவ்வாறு பழகியதால், பல குடும்பங்களில் ஒரு உறவினன்போலவே என்னைப் பாராட்டும் நிலை ஏற்பட்டது. பலர் அப்பா என்றும் தாத்தா என்றும் அழைக்கும் பேறு கிடைத்தது. நான் 1949-ம் ஆண்டில் நோய்வாய்ப் பட்டு, சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் special ward எடுத்து மூன்று மாதம் சிகிச்சை பெற்றபோது ஒரு செல்வப் புதல்வி நாடோறும் சில வாரங்கள் கந்தர் கலிவெண்பாவும் கந்தரனுபூதியும் பாராயணம் செய்தது முருகன் திருவருளை விரைவில் கூட்டி வைத்து எனது பிணியையும் போக்கிற்று. தமிழ்நாட்டின் பல பகுதிகளில் நான் நோயுற்றிருந்த செய்தி விரைவில் பரவியபடியால், ஆண்களும் பெண்களுமாகப் பற்பலர் ஆஸ்பத்திரிக்கு வந்து என்னை விசாரித்தனர். பற்பல நண்பர்கள் கடிதங்களும் எழுதினர். இவைகளெல்லாம்

எனது நல்வினைப் பயனாக இறைவன் திருவருள் கூட்டி வைத்த முறையாகும்.

34. **சைவ வைணவ சமரசம் :** இது எனது தந்தையார் அளித்த நன்கொடை. அவர் பூசித்த படங்களுள் பெருமாள் படமும் ஒன்று. நாடோறும் கற்பூர ஆராதனை செய்யும்போது "உயர்வறவுயர்நலம்", "பங்கயக்கண்ணனென்கோ" முதலிய திருவாய்மொழிப் பாடல்களை உபயோகிப்பார். அடிக்கடி திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள்கோயில் சென்று வணங்குவார். ஸ்ரீரங்கம், ஆழ்வார் திருநகரி, அழகர்கோயில், காஞ்சிபுரத்திலுள்ள பெருமாள் கோயில்கட்கெல்லாம் நாங்களிருவரும் போனோம். பிறகு நான் சமய ஆராய்ச்சியில் சைவ வைணவ நூல்களை நுட்பமாகப் படித்தபோது நூற்றுக்கணக்கான ஒற்றுமைப் பகுதிகளை யனுபவித்தேன். கையடக்கமான எளிய விலைப் பதிப்புக்களாக நாலாயிர திவ்ய ப்ரபந்தம் முதலிய நூல்கள் வெளிவரவில்லையே என்று பல ஆண்டுகள் கவலைப்பட்டேன். இறுதியில் நானே அச்சிற் பதித்து வெளியிடும்படியான பேறும் கிடைத்தது. பகவத் விஷயம், பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் முழுமையும், ஸ்ரீ வசனபூஷணம், ஆசார்ய ஹ்ருதயம், அஷ்டாதச ரஹஸ்யம் முதலியவற்றைப் பயின்றபின் சைவமும் வைணவமும் நூற்றுக்கு நூறு பங்கு ஒற்றுமையென்று நான் சொல்வது வழக்கம். இதை நடைமுறையில் காட்டுவதற்கு எனக்கு ஒரு நல்ல வாய்ப்பும் கிடைத்தது. ஒரு சிவாலயத்திற்கும் ஒரு வைணவ ஆலயத்திற்கும் நான் தருமகருத்தனாக நியமிக்கப்பெற்றேன். கோவூர் சுந்தரேசுவரர் ஆலயத்தில் பத்தாண்டுகள் தருமகருத்தனா யிருந்தேன். பல திருப்பணிகள் செய்தேன். திருவிழாக்களில் சொற்பொழிவுகள் சமய பாடங்கள் நடத்துவதைத் தொடங்கினேன். அறுபத்துமூவர் உத்ஸவத்தை எவ்வாறு நடத்தவேண்டும் என்பதற்கும் ஒரு திட்டம் வகுத்தேன். திருவிடவெந்தை நித்தியகல்யாணப் பெருமாள் கோயிலுக்கும் ஐந்து ஆண்டுகள் தருமகருத்தனாயிருந்து பல திருத்தங்கள் செய்தேன். இரண்டு கோயில் வரலாறுகளையும்

கல்வெட்டுக்கள் முதலியவற்றோடு சிறு நூல்களாக ஓாணு விலே குறித்து வெளியிட்டேன். பிறகு சென்னை அறநிலேயப் பாதுகாப்புக் கழகத்தினர் இதைப்போலவே ஒவ்வொரு கோயிலிலும் செய்யவேண்டுமென்று கட்டளேயிட்டார்கள். கோவூர் சிவாலயத்தின் ஆதரவில் ஒரு பெருமாள் கோயில் இலமாயிருந்தது. உத்ஸவ விக்கிரகங்கள் சிவாலயத்திலேயே வைத்துப் பாதுகாக்கப்பட்டன. மூலவர் சிலேகள் பின்னப் பட்டு ஒரு அறையில் பாதுகாக்கப்பட்டன. அந்தப் பெரு மாள் கோயிலேப் புதுப்பித்து புது சிலேகளேப் பிரதிஷ்டை செய்து சம்ப்ரோக்ஷணம் நடத்திப் பிறகு சுந்தரேசுவரர் திருக்கல்யாண உத்ஸவத்தில் பெருமாளேச் சிவன் கோயி லுக்கு எழுந்தருளப் பண்ணி, சுந்தரேசுவரரும் பெருமாளும் ஒன்ருகப் பக்கத்தில் பக்கத்தில் எழுந்தருளி நான்கு வீதி களிலும் பவனிவரும் திட்டத்தை வகுத்தேன். புதியதாக ஏற்பட்ட பெருமாள் கோயிலில் திருக்கல்யாணம், கிருஷ்ண ஜயந்தி, ஸ்ரீ ராம நவமி, புரட்டாசி சனிக்கிழமைகள், வைகுண்ட ஏகாதசி, தனுர்மாசத்தில் திருப்பாவை கால க்ஷேபம் முதலியவைகளே உபயக்காரர்களேக்கொண்டு ஏற் பாடு செய்தேன். என் உடனிருந்த தருமகர்த்தர்கள் எதிர்ப்பை மேலதிகாரிகள் புறக்கணிக்கும்படி செய்து இவை களே யெல்லாம் முடித்தேன்.

35. **பெரியார்கள் பாராட்டு:** சட்டத்துறையிலும் சமயத்துறையிலும் பல பெரியார்கள் என்னேப் பாராட்டும்படி எப்போதும் நடந்துகொள்வேன். இப்போது டில்லி சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதியாக வேலே பார்க்கும் சந்திரசேகர ஐயர் ஒரு சந்தர்ப்பத்தில் என்னேப்பற்றிக் குறிக்கும்போது "a man of saintly character" என்று வாயாரப் புகழ்ந்தார். ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் பற்பல சந்தர்ப்பங் களில் என்னே உள்ளன்போடு பாராட்டுவார். மஹாமஹோ பாத்யாய பண்டிதமணி கதிரேசச் செட்டியார், தூத்துக்குடி சிவகுருநாத பிள்ளே, யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதர், சுவாமி விபுலாநந்தர் முதலிய பல பேரறிஞர்களும் அவ்வப் போது பாராட்டியதுண்டு. தமிழ்ப்பெரியார் திரு. வி. க.

8

அவர்கள் எனது நெருங்கிய நண்பர். அவரைப் பார்க்கச் செல்லும்போதெல்லாம், குறைந்தபக்ஷம் ஒருமணி நேரமாவது சம்பாஷணை நடக்கும். 1925-ம் ஆண்டிலிருந்து அவர் என்னோடு அளவளாவுவார். எனது சொற்பொழிவுகள் சிலவற்றை எழுதித் தரும்படி செய்து தமது நவசக்தி வாரப் பதிப்பில் வெளியிடுவார். நான் 1928-ம் ௵ இரண்டு மாதம் வட இந்திய சுற்றுப்பிரயாணம் செய்தேன். அதன் வரலாறு தொடர்ச்சியாக நவசக்தியில் பல இதழ்களில் வெளி வந்தது. அவரை யழைத்துக்கொண்டு திருப்போரூர், திருவிடவெந்தை, கோவூர் முதலிய தலங்கட்குச் செல்வேன். "எனது உடல்நிலைக் கேற்றவண்ணம் முதலியார் உணவளிப்பர். ஒருவார வழிபாடும் உணவும் இறைப்பேச்சும் எனது உடலுக்கு எவ்வளவோ நலஞ்செய்யும்...... கோயில் வழிபாடு முதலியாரால் முறையாக நிகழ்த்தப்படும், அர்ச்சனை முதலியனவும் அவரால் செய்யப்படும். என் வழிபாடோ விரைந்து—மிகவிரைந்து நிகழும்...பாலசுப்பிரமணிய முதலியார் கோயில் வழிபாட்டை முடித்துத் திரும்பியதும் திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தரனுபூதி முதலிய தெய்வத் தமிழ் நூல்களைப் பொருள் விளங்க ஓதுவர். அதில் என் நெஞ்சம் நிலைக்கும். கந்தர் கலிவெண்பாவில் "பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும் அச்சம் அகற்றும் அயில்வேலும்......ஈராறு அருள்விழியும் மாமுகங்கள் ஆறும்......எதிர்தோன்ற......எவ்வாமும் தந்து புகுந்து'' எனும் பகுதி வருங்கால் என் கருவி கரணங்கள் நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகும்'' என்று தமது வாழ்க்கைக் குறிப்புக்கள் எனும் நூலில் (பக்கம் 678, 679) குறித்துள்ளார். மேலும் அந்த நூலில் பக்கம் 674, 675ல் குறித்துள்ள ஒரு சிறு பகுதியும் அமைவுடைத்து. "கருவில் திருவுடையார் என்பது புலவர்மொழி. அம்மொழிக்கு இலக்கியர் மயிலை பாலசுப்பிரமணிய முதலியார்.....பாலசுப்பிரமணிய முதலியார் வாழ்க்கையில் பல நலங்கள் வாய்க்கப்பெற்றவர். அவர்க்குக் கல்விச் செல்வம் உண்டு; பொருட் செல்வம் உண்டு; சொற் செல்வம் உண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக,

'செல்வன் கழலேத்தும் செல்வம்' அவரிடம் பொருந்தியுள்ளது. கருத்து வேற்றுமைகளை உளங்கொள்ளாது சிக்கல்களையும் அருஞ்செயல்களையும் தள்ளிமுடிக்கும் வல்லமை முதலியாரிடத்தில் சிறப்பாக அமைந்துள்ளது...பாலசுப்பிரமணிய முதலியார்க்கும் எனக்கும் சிற்சில துறைகளில் கருத்து வேற்றுமையுண்டு. அது காரணமாக நாங்கள் பிணங்கிப் பூசல் விளைத்துக்கொள்வதில்லை. பிணக்குநேரினும், அது நீர்கிழிய எய்த வடுப்போல மாறிவிடும்.'' எங்களிருவர் நட்பின் மிகுதிக்கு அறிகுறியாகத் தமது நூலுக்கு அணிந்துரையளிக்கும் பேறும் அவரால் எனக்குத் தரப்பட்டது.

36. **முடிபுரை:** எனது வரலாற்றுச் சுருக்கத்தை இந்த அளவில் முடிப்பதே பொருத்தம். "என்செய்வான் தோன்றினேன்'' என்று முதன்முதலில் எழுப்பிய கேள்விக்கு, ஏதோ ஒரு சிறிதளவேனும் செய்தேன் என்று விடையளிக்கத் தயங்கமாட்டேன். தமிழ் நாட்டில் தோன்றும் ஒவ்வொருவரும், நான் செய்த அளவேனும் தொண்டு செய்தால், தமிழ் நாடும் தமிழ் மொழியும் சைவ வைணவ சமயங்களும் மேன்மேலும் வளர்ந்தோங்கி என்றும் புகழோடு விளங்கும். "தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று'' என்றார் திருவள்ளுவர். புகழொடு தோன்றினேனா என்பதைப் பிறரே கூற வல்லார். தோன்றலில் தோன்றாமை நன்று என்ற பழமொழி என்னைச் சாராதென்றே நம்புகிறேன். புன்னெறியதனில் செல்லும் போக்கினை விலக்கி...என்னையும் அடியனாக்கி...ஆண்ட பன்னிருதடந்தோள் அண்ணல் பாதபங்கயங்கள் போற்றி. பொங்கும் மங்களம் எங்கும் தங்குக. மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம். வாழ்க சீர் அடியார் எல்லாம்.

பாராட்டு உரைகள்

1

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், சீலத்திலும் சிவபக்தியிலும் சிறந்த ஒரு குடும்பத்தில் தோன்றியவர். அவர்தம் பெற்றோர்கள் பல விரதமாதியன அநுஷ்டித்து வேண்டியதன் பயனாக அவர்கட்கு அருமை மைந்தராய் வந்துதித்தவர். இளமை முதற்கொண்டே சைவ ஒழுக்கத்தில் வளர்க்கப் பெற்றவர். இவர் இயற்கை மதி நுட்பமதிக முடையவர். மாணவப் பருவ முழுவதிலும் தலைமாணாக்கராய்த் திகழ்ந்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பெருந் தேர்ச்சி பெற்றதோடு, வடமொழியையும் மேல் வகுப்புகளிற் சில ஆண்டு காலம் கற்று, பெற்ற அறிவைப் பின்னரும் வளர்த்து வந்தவர். சிறந்த பேச்சுத் திறனும் எழுத்துத் திறனும் படைத்தவர். முதல்தரமான வழக்கறிஞரென்னும் பேர்படைத்து வாழுநாளில், சமயப் பற்றின் முதிர்ச்சி காரணமாக அத்தொழிலைக் கைவிட்டு, சமயத் தொண்டையே மேற்கொண்ட சைவ வீரர். சைவ சித்தாந்த மகா சமாஜத்துடன் சுமார் 35 ஆண்டுகாலம் தொடர்புடையராய், அதில் 22 ஆண்டு செயலாளராகவும் 3 ஆண்டு காலம் பத்திராசிரியராகவும் தொண்டாற்றியவர். தன்னலங் கருதாது, பல சிறந்த இலக்கிய நூல்களையும் சைவ வைணவச் சமய நூல்களையும் அயராதுழைத்துச் செய்த அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் அடக்கவிலைப் பதிப்புக்களாக வெளியிட்டுதவியவர். தாம் செல்வராயிருந்தும், வாழ்வெனும் மையலின்றி, மிகத் தூய்மையான எளிய வாழ்க்கையை நடத்தி வருபவர். நேர்மையும், கண்டிப்புமதிகம் உடையவர். அழுத்தமான சைவராயிருந்தும், ஸ்ரீ வைஷ்ணவம், கிறிஸ்துவம் முதலிய பிற சமயங்களையும் நீதி முறையிற் போற்றும் சமரச நன்னோக்குடையவர். இவர் செய்துள்ள அரிய அறிவுத் தொண்டிற்காக இம் மகா சமாஜத்தின் பெருநன்றி உரியதாகும்.

இவருக்கிப்போது 60 ஆண்டுகள் நிரம்பியுள்ளன. இது காலவளவு மனித ஆயுளின் ஒரு பாதியே என்னுமோர்

பண்டை நம்பிக்கையுளது. இவர் உலகநலம் பெருக்கும் வகையில் அருள் பழுத்த சைவ வாழ்க்கையை இன்னும் பல்லாண்டு பல்லாண்டு நடாத்திப் பொன்றாப் புகழ்பெற்று விளங்கத் தாய்தந்தை பல்லுயிர்க்கும் தாமேயாய தலைவர் தண்ணருள் புரிவாராக.

ச. சச்சிதானந்தம் பிள்ளை

2

சைவத்துக்குத் தொண்டு புரிந்து வரும் பெருமக்களுள் நமது ம. பா.வுக்கு உலகு, தலையாய இடம் தரும். சைவத் திருமுறைகளையும், சாத்திரங்களையும் பதிப்பித்து அடக்க விலைக்குப் பல்லாயிரக்கணக்கில் வழங்கத் தம் உழைப்பையும் வாழ்நாளையும் அர்ப்பணம் செய்த இவரை. துறவியென்றே சொல்லவேண்டும் இவர் ஆற்றிய பணியை விட வேறு மேலான ஆக்க வேலை இலது. இவர் போன்ற பலர் சைவத்துக்குத் தேவையாயிருக்கிறது. சைவம் வேலையால் வளருமே தவிர வாய்ப்பேச்சால் வளராது. இத்தகைய சித்தாந்தச் செம்மல் இன்னும் நீடிய நல்வாழ்வு பெற்று நம்மனோர்க்கு உற்ற துணையாக இருக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். அவர் வாழ்க்கை எதிர்காலச் சைவர்களுக்கு நல்ல எடுத்துக்காட்டு என்பதில் ஐயமில்லை.

நல். முருகேச முதலியார், பி. ஏ.

3

உலகிலே ஒவ்வொரு நாட்டினர்க்கும் தனிப்பட்டதோர் கொடிச் சின்னம் முதலியவை யுண்டு. நம் நாட்டிலும் முடியுடை மூவேந்தர்க்கும் வில், புலி, மீனக் கொடிகளிருந்தன. அடையாள மாலைகளுமுண்டு. அதேபோல் சமயத்துறையிலும் மக்களுக்குத் தனிப்பட்ட சின்னங்களிருத்தல் பொருத்தமே. தம் சமயம் இது என்பதையும் சமயக் கருத்துக்கள் இவை, என்றும் காட்டவல்ல அடையாளங்கள் வேடமாய் அமைந்தன. அவ்வேடந் தாங்கிய அடியவரையும் அவர்தம் தலைவனாகவே கருதி வழிபடுவதும் மரபாயிற்று

என்பதை 'மாலற நேயம் மலிந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரனெனத் தொழுமே' என்ற சிவஞான போதத்தால் அறியலாம்.

பழம்பெருந் தொன்மையும், அரும்பெருந் தன்மையும் வாய்ந்த நம் சைவ சமயத்திற்குத் திருநீறே மாபெருஞ் சின்னமாய்த் திகழ்வது. உருத்திராக்கம்கூட காலத்தாலும் அணிமுறையாலும் அதற் கடுத்தபடியாகவே நிற்குமெனக் கூறலாம்.

சைவத்தின் தனிப்பெருஞ் சின்னமாய்த் திகழும் திருநீற்றின் பெருமையைப் பலபடியாகக் கூறுவர் சைவப் பெரியோர். "அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க" என்பதை நினைவூட்ட வாழ்க்கையின் நிலையாமையை நினைவூட்டுவர் பெரியோர். முடிமன்னனும், மக்கள்தம் வடிவழகும் ஒருபிடி சாம்பராய் முடிவதுதான் கடைசியில். எதை எரித்தாலும் சாம்பராய் மாறும். ஆனால் அச்சாம்பரோ என்றும் மாறுதது. அழியாது நிற்பது. இறந்துவிட்டோரை இடுதலும் சுடுதலுமே நம் நாட்டுப் பண்டைய மரபாகும். இட்டது எலும்பாகும், சுட்டது சாம்பராகும் எனும் இருநிலையினையும் எடுத்துக்காட்டவே மண்டையோட்டு மாலையினையும், உடல் முழுதும் "காடுடைய சுடலைப் பொடி"யாகிய நீறு பூசியும் நமக்கு நினைவூட்டுகின்றார் நம் பெருமான். இவ்வளவு நினைவூட்டியும் நம் மனம் சற்றேனும் நெகிழ்வதில்லை என்பதைத் தன்மீதேற்றி,

"………சிவனவன் திரள் தோள்மேல்
நீறு நின்றது கண்டனையாயினும் நெக்கலை இக்காயம்
கீறு இன்றிலை கெடுவதுன் பரிசிது கேட்கவுங்கில்லேனே."

என்பர் மணிவாசகர்.

பசுவின் மலத்தை எரித்துத் தெள்ளித் தூய்மையாக்கப் பெறும் திருநீறுனது, பசுவெனக் கருதப்படும் ஆன்மாவின் மும்மலங்களும்,அழல்வடிவான பசுபதியாம் பரமனையடைந்து தூய்மையடையும் என்பதனையும் காட்டும். மிக்க மாசுற்று தொன்றும் அழல் வடியாப அரனைச் சேர்ந்தால் மாசற்றதாக

லாம் எனும் மாட்சியையும், மிகத் தாழ்ந்தோர்க்கும் மாறி உயரும் வாய்ப்புண்டு என்பதையும் விளக்குவதன்றோ இத் திருநீறு. தூய்மைக்குரிய நிறமாம் வெண்ணிறத் திருநீற்றை அணிபவர், புறத்தூய்மை போலவே அகத்தூய்மை பெற்றுயர முயலுவர். "பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்" என்பர் சேக்கிழார் பெருமான். இவ்வாறு அணிந்தோர்க்கு அழகுதரும் நீறு அருந்தினோர்க்கும் ஆரமுதாய் உய்வித்தது என்பதை வரலாறு உரைக்கும். அரவின் விடந் தீர்த்தது, மன்னனின் மாபெரும் நோய்க்கு மருந்தாகி அவன் கூனையும் நிமிர்த்தியது! பலரது உள்ளங்களையே மாற்றி மதம் மாறிச் சைவத்திற் சேரவும் செய்தது! இத்தகைய அரும் பண்புகள் வாய்ந்த திருநீறு எம்பிரான் திருவுருவில் இயற்கையாய்ப் பொலிவது—நெருப்பின் மீது (சாம்பல்) நீறு பூத்தல் இயல்பு தானே. இவ்வாறு அழல்வடிவான அரனின் உடம்பெலாம் இயல்பாய்ப் பூத்து நிற்கும் தன்மையினையும், திருநீற்றின் வன்மையினையும் சிதம்பர சுவாமிகள் தமது திருப்போரூர் சந்நிதி முறையில் அழகாய்க் கூறுவர்.

ஆதிபகவன் ஞானவடி வழலிற்பூத்து நித்தியமாய்
அணிந்தோர் தமக்கு வசிகரமாய் அருந்தினோர்க்கு ஆரமுதாய்
நீதியறியும் பசுமலத்தை நீக்குமொரு நற்குறிகாட்டி
நிகழ்பேரின்பக் கடலூட்டி நின்றபுகழ் வெண்திருநீறே.

நீறுபூத்த நெருப்பின் தன்மை அடக்கத்திற்கோர் அறி குறியாகவும், மக்களால் குறிக்கப்படும். நீறுபூத்த நெருப்பு பார்ப்பதற்குப் பற்றியெரியும் தீப்போல் பகட்டாய்த் தோன்றாது. உள்ளே நெருப்பு இருப்பதே தோன்றாது. பூசிய நிமலனைப் போல்—நிட்டையிலிருக்கும் ஞானியைப் போல்—மறைந்தொடுங்கி யிருக்கும். ஆனால் மேலிருக்கும் சாம்பலை ஊதிய மாத்திரத்தே ஊதியோர் கண்களில் தூசு வீச! நெருப்பும் வெளிப்படும். எனவே தான், தன் முழு ஆற்றலையும் வெளிக்காட்டாது, மறைந்து நிற்கும் ஆன்றோரை நீறு பூத்த நெருப்பு என்று குறிப்பது மரபு. அத்தகைய நீறு பூத்த நெருப்புப் போன்றவர்களுள் ஒருவர் இம்மணிவிழா மலர்க்குரிய மாபெருந் தொண்டர் மா. பா.வும். அவரது முழு

ஆற்றலையும், அறிவையும், அரும்பெரும் பண்புகளின் முழுப் பயனையும் இன்று தமிழ்நாடு உணரவில்லை என்றே கூறலாம். விளம்பரம் விரும்பாத விழுத்தகையாளராய் நம் சமாஜத்தின் எல்லாப் பணிகளையும் கால்நூற்றாண்டுக் காலமாகவே ஆற்றி வருபவர். அவரது உழைப்பால் வெளிவந்த சமாஜ அடக்க விலைப் பதிப்புக்கள் அநேகம். அரும்பெரும் ஆராய்ச்சி உரைகள் அளவிடற்கரியன. மணிவிழாத் தலைவர் மாநிலத்தில் நீடுழி வாழ்ந்து நிரந்தரமான நெடும் பெருஞ்சின்னமாய் நம் சமாஜத்திற்கும் தொண்டாற்றித் திகழுமாறு நீறுபூத்த நிமலனை வழுத்துவோம்.

அ. காமாட்சி குமாரசாமி, எம். ஏ.

4

ம. பா. அவர்கள் ஆங்கிலம், ஆரியம், தமிழ் என்ற மும்மொழிகளிலும் சிறப்பாகப் புலமை பெற்றவர். அவரது ஆங்கிலப் புலமையை அறிதற்கு அவர் 1950-ம் ஆண்டில் காசி பல்கலைக் கழகத்தில் ஆற்றிய சித்தாந்தச் சொற்பொழிவுகளே சான்றாக விளங்குகின்றன. அவர் கல்வெட்டுக்களை நன்கு ஆராய்ந்துள்ளார் என்பதை அவர்களது முன்னுரைகளாலும் கட்டுரைகளாலும் அறியலாகும். "நாலாயிரப் பிரபந்தம்" "திருப்பாவைப் பேருரை" என்ற இரு நூல்களையும் நன்கு ஆராய்ந்து ஆராய்ச்சி முன்னுரைகளுடன் அவர் பதிப்பித்துள்ளார். இது அவரது வைணவப் புலமையும் வடமொழிப் புலமையும் அறிந்து கொள்வதற்குச் சான்றுகளாக விளங்குகின்றன. சமாஜப் பதிப்பாக வெளிவந்த பன்னிரு திருமுறைகளுக்கும் பதினான்கு சாத்திரங்களுக்கும், அவர்கள் அரிய ஆராய்ச்சி முன்னுரையும் விளக்கவுரைகளும் எழுதியுள்ளார்கள்.

திரு. முதலியார் அவர்கள் சைவ சித்தாந்த மகா சமாஜமாகிய கட்டிடத்திற்குத் தூண் போன்றவர்கள். அவர் 22 ஆண்டுகள் சமாஜச் செயலாளராக இருந்து பல அரிய பணிகள் புரிந்து மூலையில் இருந்த சமாஜத்தை முற்றத்தில் கொண்டு வந்தார். இவரது அரிய சமயத் தொண்டினை நோக்

கும்போது "மூலே இருந்தாரை முற்றத்தே விட்டவர், சாலப் பெரியரென் றுந்தீபற, தவத்தில் தலேவரென் றுந்தீபற" என்ற திருவுந்தியார் 12-ம் பாட்டு நினேவுக்கு வரும்.

திரு. முதலியார் அவர்கள் சாலப் பெரியர்; தவத்தில் தலேவர்; மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகக் கண்டவர்; பாடல்பெற்ற 274 திருப்பதிகளுள் அவர்கள் பல திருப்பதிகளேத் தரிசனம் செய்து கண்ட குறிப்புகளே அவரது சிவஸ்தல யாத்திரை மஞ்சரி நூலில் காணலாம். யான் 1937-ம் ஆண்டு முதல் சமாஜத்தின் செயற்குழுவில் இடம் பெற்றுள்ளேன். எனவே கடந்த 22 ஆண்டுகளாக யான் அவர்களின் அன்பினேயும் ஆசியினேயும் பெற்று வருகின்றேன். சமாஜத்தை வளர்த்துவரும் தனிப் பெருமை அவர்களுக்கே உண்டு. அவரது மணிவிழாவில் யான் அவரை ஒன்று வேண்டுகின்றேன். சமாஜத்திற்கென ஒரு சொந்தக் கட்டிடம் அவர் பெயரால் அமையவேண்டும் என்பது எனது ஆசை. எனவே அவரது மணிவிழாவில் சமாஜக் கட்டிடத்திற்கு வேண்டிய நிதியை அவர் அளித்து அக்கட்டிடம் அவரது மணி விழா மண்டபமாக அமைதற்குத் துணேசெய்ய வேண்டுகின்றேன். அவர்கள் ஆங்கிலத்தில் சைவ சித்தாந்தத்தைப் பற்றி ஒரு நூல் வெளியிடவேண்டும் என்பதும் எனது ஆசை. அவர்கள் பன்னெடுங்காலம் சிறக்க வாழுமாறு அம்பலத்தாடும் ஸ்ரீ நடராசப் பெருமானே எனது மனமொழிமெய்களான் இறைஞ்சுகின்றேன்.

பு. ஆலாலசுந்தரன், எம். ஏ.

5

என் ஊர் மாயூரம் (திருமயிலாடுதுறை) பாடல் பெற்ற பதிகளில் ஒன்று. 1920-ஆம் ஆண்டில் சென்னே சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டு விழா யாழ்ப்பாணம் உயர்திரு. சுவாமிநாத பண்டிதரவர்களின் தலேமையில் நடந்தது. யான் உயர்நிலேப்பள்ளி மாணவனுக இருந்தேன். அச் சமாஜ விழாவில் தொண்டர்படைத் தலேவனுக இருந்து பணிபுரியும் பேறு கிடைத்தது; பேரறிஞர்கள் சொற்பொழிவுகளேக் கேட்டின்

புறும் வாய்ப்பும் எய்தியது ; சமாஜ நிகழ்ச்சிகள் என் மனதைக் கவர்ந்தன. பின்னர்ப் பத்து ஆண்டுகள் சமாஜத்தைப்பற்றி யறிந்துகொள்ள எனக்கு இயலவில்லை.

நான் சென்னையில் அரசாங்க அலுவலில் அமர்ந்தேன். 1930-ஆம் ஆண்டு சமாஜ ஆண்டு விழா பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் பண்டிதமணி-தலைமையில் நடந்தது. மூன்று நாட்களிலும் நிகழ்ந்த பேருரைகளைக் கேட்டு அனுபவித்தேன். சமாஜத்தின் உறுப்பினனாகும் விருப்பம் உண்டாயிற்று.

1931-ல் சித்தாந்த மாத இதழ்களில் 'சென்றடையாத திருவுடையான்' என்ற சொற்றொடருக்கு விளக்கமாகப் பல கட்டுரைகள் வெளிவந்தன. அடியேனும் என் சிற்றறிவுக் கெட்டியாங்கு சிறு கட்டுரை தீட்டி விடுத்தேன். கட்டுரையும் வெளிவந்தது ; முதலியார் அவர்களிடமிருந்து ஒரு கடிதமும் வந்தது. அதில், சிறு கட்டுரைகள் எழுதும்படிக்கும், சமாஜ அங்கத்தினன் ஆகும்படிக்கும் எழுதியிருந்தார்கள். உடனே சமாஜத்தின் உறுப்பினனும் ஆனேன். ம. பா. அவர்களுடன் தொடர்புக்குக் காரணம் இதுவே. 1931-ல் ஆண்டு விழா கூவம் என்னும் திருவிற்கோலத்தில் நடந்தது. என்னை சமாஜ உதவிச் செயலாளனாகத் தேர்ந்தெடுத்தார்கள். அது முதல் (1934, 1935-ஆம் ஆண்டுகள் தவிர) 1942-ஆம் ஆண்டு வரையில் உதவிச் செயலாளனாகவும், சிறிதுகாலம் உதவி இதழாசிரியனாகவும் இருந்து பணிபுரிந்தேன். அக்காலங்களில் ம. பா. அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் கிடைத்தது. 1930 முதல் 1955 வரை நடந்த 25 சமாஜ ஆண்டு விழாக்களில், 17 விழாக்களுக்குப் பல ஊர்களுக்குச் சென்று அவர்களுடன் தொண்டாற்றும் பெற்றியும் எய்தியது ; அதனால் பல பேரறிஞர்களின் கூட்டுறவும் கிட்டியது ; உடனுறையும் பயனும் கிடைத்தது.

வித்தகம் பேசாது பணி செய்தவர். சைவத்திற்கும் தமிழுக்கும் அருந் தொண்டியற்ற வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டார்கள். பல ஆண்டுகள் சென்னையில் அடைந்துகிடந்த சமாஜத்தைப் பல ஊர்களுக்கு அழைத்துச்

சென்றூர்கள். அதன் பெருமையைத் தமிழ்நாடு மட்டுமன்றி ஈழநாடு, மலாய்நாடு முதலிய இடங்களில் தெரியச் செய்தார்கள். பல நூற்றுக்கணக்கான சொற்பொழிவுகளைப் பல ஊர்களில் செய்து சைவத்தின் சிறப்பைப் பரப்பினூர்கள். திருமுறைகள், சாத்திரங்கள், இலக்கிய நூல்கள், திருப்புகழ், பிரபந்தம் முதலியவற்றை அடக்க விலைப் பதிப்புக்களாகப் பல்லாயிரக்கணக்கில் வெளியிட்டார்கள்.

யான் சிவில்லிபுத்தூரிலும், இராமநாதபுரத்திலும் வேலையிலிருந்தபோது என்னுடன் வந்து தங்கினூர்கள். வைணவ சமயத்தைப் பற்றிச் சொற்பொழிவு செய்தார்கள். முன்னைய ஊர் வைணவக்கோட்டை; பின்னைய ஊர், வைணவ அறிஞர்கள் நிறைந்தது. ம. பா. அவர்களின் பேச்சைக்கேட்டு, வைணவ சம்பிரதாயச் சொற்களை வைணவ சமய பரிபாஷையில் அழகிய உச்சரிப்புக்களுடன் பேசியதை வியந்து பாராட்டினூர்கள்.

சமாஜம் அடைந்த சிறந்த நிலைக்கு ம. பா. அவர்களே காரணர். அவர் அஞ்சா நெஞ்சினர்; எண்ணியது எண்ணியாங் கியற்றும் திண்ணியர்; நுண்மாண் நுழைபுல மிக்கவர்; விரிந்த கேள்வியர்; பரந்த நோக்கினர்; தோலா நாவினர்; எளிய வாழ்க்கையர்; அன்னூர் குணங்கள் என்னல் விளம்பும் தகையதோ! சைவ வீரர் என்றூல் அவருக்கே தகும்.

வாழ்க மயிலை கிழார்! வாழ்க மயிலை மாதவதாசர்!

ஜி. கலியாணம் பிள்ளை

6

திரு. ம. பா. அவர்கள் ஒழுக்கம் வாய்மை நாண் மூன்றும் கல்வியறிவால் மட்டும் அன்றி, இயல்பாகவே வழுவாதிருக்கும் வண்ணம், கருத்தும் சொல்லும் செயலும் தம்முள் மாறுகாத செப்பம் உடையவர்; ஒழுக்கத்தை உயிரினும் காப்பவர்.

'நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு'

என்பது அவர் திறத்தில் முற்றும் வாய்மையாகின்றது.

'சீருடைச் செல்வர்' ஆதலின், ஆகாறு வேண்டாராயும், திருவருள் நெறி அன்றி வேறு போகாறு நீண்டாராயும் அச்செல்வத்தைப் பயன்படுத்திக் கொண்டார். திருவண்ணாமலைத் திருவிளக்கீடு தில்லைத்திருவாதிரை முதலிய இன்றியமையாத திருவிழாக்களை ஆண்டுதோறும் தவறாமல் காண்டலை நோன்பாகக்கொண்டு காத்து வருபவர்.

நுண்மாண் நுழை புலமும், எண்பொருளவாகச் செலச் சொல்லிப் பிறர்வாய் நுண்பொருள் காணும் அறிவும், நுணங்கிய கேள்வியும், வணங்கிய வாய்மொழியும், புலனடக்கமும், சொல்லிய வண்ணஞ் செய்யும் அருமையும், வினைத் திட்பம் மனத்திட்பங்களும், உலகத்தியற்கை அறிந்து செய்யும் மதி நுட்பத்தை நூலறிவோடு உடைமையும், திருவினை ஆக்கும் முயற்சியும், தம் கேளிர் நண்பர் முதலோர் துன்பம் துடைத்தூன்றும் தூண்நிகர் மாண்பும், இன்னோரன்ன பற்பல நற்பண்புகள் எல்லாம் ஒருங்கே உருக் கொண்டவர்.

முதுபெரும் புலவர்-முத்து. சு. மாணிக்கவாசகனார்

7

காந்தி அடிகள் காங்கிரசிற்கு எப்படியோ அதேவண்ணம் ம. பா. சைவ சித்தாந்த மகா சமாஜத்திற்கு. சென்ற முப்பது ஆண்டுகட்கு மேலாக அவர்களை அறியும் வாய்ப்பு எனக்குண்டு. புதுவையில் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் தலைமையில் சமாஜ ஆண்டு விழா நடைபெற்றபோது நல்ல சரிகை தலைப்பாகை, முழங்கால்வரை நீண்ட கறுப்புக்கோட்டு, குறுக்கே "சிவ, சிவ" என்ற எழுத்துக்கள் பொறிக்கப் பட்ட சரிகை அங்கவஸ்திரம் முதலிய அணிகளுடன் விளங்கிய அதே பெரியார், இன்று நான்கு முழ வேட்டியும் ஒரு சிறு துண்டுடனும் முப்பட்டை விபூதி ஒரு அங்குல நீள சந்தனக் கோட்டுடன் கம்பீரமாக காட்சி அளிக்கிறார்—பழைய சமாஜ இதழையோ அல்லது வெளியீடுகளையோ புரட்டிப் பாருங்கள். "பாலசுப்ரஹ்மணிய முதலியார்" என்றிருக்கும் பெயர் இன்று "பாலசுப்பிரமணியன்" ஆக மாறியுள்ளது—என்,

எப்படி என்பது எனக்குத் தெரியாது. நான் அவரை என் பிதா நிலையில் எண்ணியுள்ளேன். அவர்களுடன் தங்கும் ஒவ்வொரு வினடியிலும் மகிழ்ச்சியையும் அன்பையும் வாரி வழங்குவார்.

அரிய கருத்துக்களை எளிமையாக எடுத்துச் சொல்லும் அவரது ஆற்றல் அவருக்கே சிறப்பாயமைந்துள்ளதெனின் மிகையாகாது. ஆண்டுதோறும் கோடையில் சிறிதுகாலம் பெங்களூரிலும் சிறிது உதகையிலாவது குன்னூரிலாவது தங்குவார். எங்களை அவ்விடங்கட்கெல்லாம் அழைத்துச் சென்று உபசரிப்பார்—தமிழ்நாட்டிலுள்ள பல பகுதிகட்குச் சென்று சொற்பொழிவு செய்ய எங்கட்கு ஏற்பட்ட வாய்ப்பிற்குப் பெரிதும் காரணம் அவரே. தான் படித்து அனுபவித்த விஷயங்களை எல்லாம் பிறருக்கும் சொல்லி அவர்களையும் படிக்கவைத்து மகிழ்ச்சியடையும் பண்பு அவரிடம் நிறைய உண்டு—சிதம்பரத்தில் நடைபெற்ற சித்தாந்தக் கோடை வகுப்பில் "Instincts" பற்றி அவர் நடத்திய பாட வகுப்புக்களும், "எச்சம்" என்பது பற்றிய சொற்பொழிவும் கேட்டவர்கட்குப் பெரிதும் கருத்து விருந்தாயிருந்தன. "பிரார்த்தனை" பற்றிய அவர் அரிய கருத்துக்களைச் சிதம்பரத்தில் கூறியுள்ளார். அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக என வாழ்த்தி வணங்குகிறேன்.

பு. ர. சுவாமிநாதன் எம். ஏ., எல். டி.

8

ரஸிகமணி டி. கே. சி. அவர்களிடம் எனக்குப் பெரு மதிப்பு உண்டு. எனினும், அவர்களின் இலக்கியப் போக்குகளில் பல எனக்குப் பிடிப்பதில்லை. ப், த், என்னும் வல்லெழுத்துச் சந்திகள் போடும் அவருடைய முறை, காளமேகம், ஔவை போன்றவர்கள் பாடியனவென்று கர்ணபரம்பரையாக வழங்குகிற நல்ல செய்யுள்களைக் கம்பர் பாடியனவென்று அவர் சாதிப்பது, ராமாயணத்தில் வரும் ஆயிரக் கணக்கான பாடல்களைக் கம்பர் பாடியவை அல்ல என அவர்

ஒதுக்கித் தள்ளுவது, 'வெள்ளைக்காரப் பணம் வெள்ளிப் பணம்' முதலிய நாடோடிப் பாடல்களில் 'பொயட்ரி' இருப்பதாகச் சொல்வது - இவற்றையெல்லாம் யான் ஒப்புக் கொள்ளுவதில்லை. ஆனால், இற்றைக்குக் கால்நூற்றாண்டுக்கு முன் தியாகராய நகரில் அவர் வாழ்ந்துவந்த இல்லத்தில் இலக்கிய நண்பர்கள் கூடியுள்ள ஒரு வட்டத்தொட்டியில் திடுமென ஒரு கருத்தை வெளியிட்டார். "உண்மைச் சைவர் இன்று ஒருவர்தான் இருக்கிறார். அவர்தான் மயிலை பாலசுப்பிரமணிய முதலியார்" என்று டி. கே. சி. சொன்னார். இதை நான் அன்றும் ஒப்புக்கொண்டேன்; இன்றும் ஒப்புக்கொள்கிறேன்.

1929-ல் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பேரறிஞர் கனம் வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்தம் மூத்த திருக்குமாரராகிய திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர் (இப்போது எம். எல். சி.) அவர்களிடம் ஓர் உதவியை நாடி, ம. பா. அவர்களைக் சிபாரிசுக் கடிதம் கேட்டேன். இதில் சுவை மிகுந்த செய்தி என்ன வென்றால், சிபாரிசுக்கடிதம் கொடுத்தவர் பாலசுப்பிரமணியம். சிபாரிசு செய்யப்பெற்றவர் பாலசுப்பிரமணியம். யாருக்குக் கடிதம் கொடுக்கப்பட்டதோ அவரும் ஒரு பாலசுப்பிரமணியம். "அறிவானுந் தானே, அறிவிப்பான் தானே, அறிவாய் யறிகின்றான் தானே" என்னும் அம்மையாரது அற்புதத் திருவந்தாதித் திருவாக்கு இச்சமயத்தில் சைவ மெய்யன்பர் களுக்கு நினைவுக்கு வராமற் போகாது. இதில் எனக்கு இறும்பூதளித்த செய்தி என்னவென்றால், "இக்கடிதம் கொண்டு வருபவர் நீங்கள் ஏற்கெனவே என்னிடம் பாராட்டிப் பேசிய 'ஏரி நிறைந்தனைய செல்வன்' கட்டுரையை எழுதியவர்" எனத் திரு. ம. பா. அவர்கள் என்னை அறிமுகப் படுத்தி யிருப்பதுதான்.

என்ன யோசிக்கிறீர்கள்? தற்பெருமை அடித்துக் கொள்கிறேன் என்றுதானே? ஏன், அவர் பெருமையெல்லாம் என் பெருமைதானே. ஆமாம், பெயரளவிலேனும் நாங்கள் இருவரும் ஒற்றுமைப்பட்டவர்கள்தானே. அவர் என் பெயரர் அல்லவா?

வல்லை, பாலசுப்பிரமணியம், பி. ஏ.

9

அருமையான சமய நூல் வெளியீட்டில் அசுர சாதனை ஒன்றினை அண்மையில் கண்டேன். அந்த நூல் தேவாரம் அடங்கன் முறை என்பது. அதைப் பதிப்பித்தவர் மணி விழாத் தலைவர்.

அவர் சைவத்திற்கும் தமிழுக்காகவுமே வாழ்பவர். அவ் வண்ணமே இன்னும் வாழட்டும்!

வ. பா. தாமரைக்கண்ணி

10

காலத்துக் கேற்றாற்போன்று சைவக் கொள்கைகளைச் சைவ இளைஞர்களுக்குப் புகட்டுவதில் தலைமையர். அவர் பழமைக்கும் பழமையர்; புதுமைக்கும் புதுமையர். எச் சமயத்தையும் தன்னுள் அடக்கிச் செல்லும் சைவ சமயம் போன்றே அவர்களும் எச்சமயத்தாரையும் எக்கொள்கையின ரையும் தம்பால் ஈர்த்தகப்படுத்தும் விறலினர். அவர்கள் "இன்னும் ஒரு நூற்றாண்டிரும்" என்ற ஆன்றோர் மொழிப் படி வாழ்ந்து சிறப்பாகச் சைவத்துக்காம் பணி செய்திலங்க இறைவனை வழுத்துகின்றேன்.

வித்வான் - அம்பை. சங்கரனர்

11

சைவ சித்தாந்த உலகில் ம. பா. என்ற எழுத்துக்கள் மந்திர எழுத்துக்கள்.

கூனூரில் அவருடன் நெருங்கிப் பழகுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. எங்கும் அமைதி, வானை முட்டும் மரங்கள், பல தண்ணிய வண்ணப்பூக்கள், 'சேணின்று இழு மென இழிதரும் அருவி" அங்குமிங்கும் உலவிக்கொண்டிருக் கும் வெண்ணிற மஞ்சு, பச்சை பசேலென்ற மலைச்சாரல், இவையெல்லாம் கண்ணுக்குக் குளிர்ச்சியையும், மனத்திற்கு அமைதியையும் தருகின்றன. நம்மை ஆட்டிப் படைக்கும் உலகமும் இக்காட்சியில் கருத்தைச்செலுத்தித் தன்சுழற்சியை

ஒரு சிறிது தளர்த்துகின்றது. உயிர் ஈரும் வாள்செயலற் றிருக்கின்றது. சுடலைக்கு ஓடிக்கொண்டிருக்கும் நாம் ஓட்டத்தை நிறுத்திச் சிந்தனையில் ஆழ்கின்றோம். இவ்வித சூழ் நிலை மன ஒருமைப்பாட்டிற்கும், சிந்தித்து நூல் எழுதுவதற் கும் துணை புரியும் என்று சொல்லவும் வேண்டுமா ?

அங்கு அவர் காலத்தை வீணாக்குவதில்லை. மாலை நேரங் களில் அவருடன் உலாவச்செல்வேன். அந்நேரங்கள் எனக்கு மிகவும் பயன் தந்தன. அவர் அறியாத பொருள் இல்லை. அவர் பேசுவது சமயம் மாத்திரமல்ல ; ஆங்கில இலக்கியம், தற்போதைய அரசியல், உலகியல், விஞ்ஞானம் என்பவை போன்ற எல்லா அறிவுத் துறைகளும் உலக விவகாரங்களு மாம். குதிரைப் பந்தயத்தைப்பற்றிப் பேச்சுவந்தால், குதிரை களுக்குக் கொடுக்கும் தினி எவை, 'handicap' என்றால் என்ன, எப்படி பந்தயம் கட்டுகிறார்கள், அதை எப்படி பகிர்ந்து கொடுக்கிறார்கள் என்பவைபோன்ற எல்லா விஷயங் களையும் கூறுவார். மேடைப்பேச்சு என்பதைப்பற்றிப் பேச்சு நிகழ்ந்தால் வள்ளுவர் அதைப்பற்றி என்ன கூறியிருக்கிறார் என்று சில அரிய கருத்துக்களைச் சொல்லுவார். இப்படி அவர் நடமாடும் கலைக் களஞ்சியமாக எனக்குக் காட்சி யளித்தார்.

கோ. நி. சிங்காரவேலு

12

சமாஜத்திற்கு உள்ளும் புறம்பும் பாதுகாப்புத் தூண் களாகவும், சாய்வுகால்களாகவும் இருந்து அவ்வப்போது அரண் செய்தவர்களுள் முதன்மையாவர்.

ஆர். பஞ்சநாதம் பிள்ளை

13

தான் மேற்கொண்டதனை விடாப்பிடியாகச் சாதிப்பதில் திறம் மிக்கவர். அவர் பல்லாண்டு வாழ இசைப்போமாக.

சித்தாந்த பிரசங்காமிர்தம் - பூ. சமரபுரி முதலியார்

14

நாவன்மையுடன் நல்ல எழுத்து வன்மை; அறிவாற்றலுடன் அரிய அவையடக்கம்; பணத்துடன் நல்ல பண்பு; அருந்தமிழுடன் ஆங்கிலக் கல்வி; ஊக்கத்துடன் உயர் பக்தி; அனைத்தும் ஒருங்கேபெற்ற ஒருவர் சைவஉலகிலே வாழ்கிறார்.

தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களால் பன்முறை பாராட்டப்பட்டவர். சொல்லின் செல்வர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்களால் "பண்பார்ந்த சித்தாந்தச்செல்வர்" என நற்சான்று நவிலப்பெற்றவர்—அய்யர் அவர்களது மாணவர். சமயத் துறையில் சிறந்து விளங்குபவர்.

மாநிறம்; மயிர் நரைத்த தலை; மலர் முகம்; நிமிர்ந்து பரந்த நெற்றித்தடம்; அருள் நிறை கண்கள்; தளர்ந்த உடல்—ஆகிய அமைப்புகளோடு அறுபதாண்டு நிறைந்து காணப்படுகிறார் ம. பா.

ஆடம்பரத்தை அறவே அகற்றிய இவர் மனிதப் பண்பு மிக்கோராய்க் காணப்படுகிறார். விளம்பரத்தை வெறுப்பவர்; தளர்ந்த உடலாயினும் தளரா ஊக்கமுடையவர்; இளமையிலேயே கசடறக் கற்றவர்.

சட்டங்கள் கற்றும், பட்டங்கள் பெற்றும் அவ்வாழ்வை உள்ளம் விரும்பவில்லை. சிவன்பாலே சென்றது சித்தம். வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத் துறை விளங்க உழைப்பதையே தன் வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்டார். உறுதியுடன் உழைத்தார், இன்னும் உழைத்துவருகிறார்.

ஜி. எஸ். ராஜன், திருவிடைக்கழி.

அம்மையே அப்பா

கா. இராமநாதன் பி. ஏ., பி. எல்., கோலாலம்பூர்

சைவ சித்தாந்த மகா சமாஜத்திற்கு அது தோன்றிய நாள் தொட்டு இன்று வரை தொண்டு செய்தவர் எண்ணிலர். அவர்களில் அதிகமான தொண்டு செய்தவர்களில் பத்துப் பேரைத் தேர்ந்தெடுப்பதானால் மிகச் சிரமம். நான் அந்தப் பத்துப் பேருக்குள் வருவேனா? புறம்பே நிற்பேனா?

வெளியே என்னை நிறுத்துவதுதான் சரி என்று எனக்குத் தோன்றுகிறது. தேர்ந்தெடுப்பது கஷ்டம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அபிப்பிராயம் தோன்றும். பத்துப் பேரை எடுப்பதே இவ்வளவு கஷ்டமானால், அதிகத் தொண்டு செய்த ஒருவரைக் குறிப்பிடுவது அசாத்தியம் என்று தோன்றும். ஆனால் இங்கு அப்படியில்லை. ஒரு பெயரைச் சொல்லச் சொன்னால் அது மிக எளிது. எல்லோரும் ஏகமனதாய்த் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களையே தலை சிறந்த தொண்டராகக் கூறுவர். இதில் சண்டையோ, போட்டியோ, தயக்கமோ இருக்க இடமில்லை. அவர் ஓர் ஒப்பிலாமணி.

நம் சைவப் பெரியார்களைப்போல் திரு. முதலியாரவர்களும், பரந்த படிப்புடையவர். ஆங்கிலம், தமிழ், வடமொழி, சைவ சாஸ்திரங்கள், வைணவம் நன்கு பயின்றவர்கள். பல கூட்டங்களில் பேசியும், தலைமை வகித்தும், கூட்டங்களை நடத்தியும் வந்திருக்கிறார்கள். இத்துறையில் முதலியார் அவர்களுக்கும் பெருமை உண்டு; அவர்களின் தனிப் பெருமை அவைகளில் இல்லை.

சமாஜத்திற்குச் சுமார் முப்பத்தைந்து ஆண்டுகள் தொண்டாற்றியுள்ளார். தொடர்ந்த தொண்டு, பெரும் பதவிகள் ஏற்று நல்ல பணி செய்துள்ளார்கள். சமாஜத்திற்கு இவ்வளவோ, இதற்கு அடுத்தபடியாகவோ, தொண்டு செய்தவர்கள் இல்லை. அம்மாவைப்போல் கண்ணிமை கொட்டாமலும், அப்பாவைப்போலக் கண்டிப்புடனும் சமாஜத்தை வளர்த்ததால் அவர்களை ம. பா. என்று கூப்பிடுகிறோமென்று பள்ளத்தூர் மகாநாட்டில் நான் கூறியது உண்மையென்று யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பண விஷயத்தில் கண்டிப்பு; இன்னும் பல விஷயங்களிலும் கண்டிப்பு; சமாஜத்திற்கு அவரே அம்மையும் அப்பனும்.

ஊதியம் சிறிதும் கருதாது, உழைப்பைக் கொஞ்சமும் பொருட்படுத்தாது, அடக்க விலை ஒன்றையே கருதிப் பல நல்ல நூல்களைச் சமாஜத்திற்காகவும், தன் பெயராலும் வெளியிட்டுள்ளார்கள். அவைகளை வாங்கிப் படித்தோர் அவரது

பணியை இனமாகப் பெற்றவர்கள். இது செம்மையான சிறந்த தொண்டு.

சில சொற்பொழிவுகளை ம. பா. அவர்கள் எழுதி வெளியிடும் வழக்கம் உண்டு. சமாஜத்திற்கு ஆதாரமாக இருந்த ஞானியார் சுவாமிகள்போல இவர்களும் எல்லாப் பேச்சுக்கும் குறிப்பு தயார் செய்தல் வழக்கம். கூடுமானால் ம. பா. முழுதும் எழுதிவிடுவது வழக்கம். கண்டதைச் சொல்லி நா அரிப்பைத் தீர்த்துக் கொண்டால் போதுமென்று நினைப்பதில்லை. அவர்களது பல பேச்சுக்கள் கட்டுரைகளாக சித்தாந்தத்தில் வெளியாயின. அவைகளில் "அகந்தைக் கிழங்கு" ஒன்று. இவை யாவும் சித்தாந்த சாஸ்திரத்தின்பால் வைத்த அன்பினில் விளைந்த ஆரமுது எனலாம். இம் மாதிரி ஆராய்ந்து ஒரு பேச்சுக்கு முப்பது நாற்பது மணி நேரம் செலவழிப்பவர் சிலரே.

எனக்கும் அவருக்கும் உள்ள தொடர்பைக் கூறுவதானால் அது மிக விரியும். ஒரு சம்பவம் மட்டும் கூற விரும்புகிறேன். சீர்காழி மகாநாட்டிற்கு என்னை இளைஞர் பகுதிக்குத் தலைவராகவும், பெரும் பேராசிரியர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களைப் பேரவைக்குத் தலைவராகவும் தேர்ந்தெடுத்தார்கள். நான் சமாஜத்திற்கு அப்பொழுது புதியவன். பண்டிதமணியவர்கள் பேரில் வைத்த மரியாதையால் அவர்கள் பக்கத்தில் சமமாக உட்காரவும் எனக்குக் கூச்சம். ஆகையால் பதவி வேண்டாமென்று மறுத்தேன். அது ஏற்கப்படவில்லை. இது விஷயமாக என் காதுக்கெட்டாமல் பல வம்புகள் வந்தன. 'இந்தப் புதுப் பேர்வழி யார்?' என்று கேட்டவர் பலர். 'ம. பா. வக்கில் ஆகையால் வேறொரு வக்கிலைத் தலைமைக்குக் கொண்டுவந்து விட்டார்' என்றார்கள். 'இந்த ஆண்டுக்குத் தலைமை வகிக்கச் செட்டியார்களைத் தவிர வேறு ஒருவரும் அகப்படவில்லையா?' என்றனர். என்னை எப்படியாவது வில்க்கிவிட வேண்டுமென்று தந்தி லெட்டர் சிபாரிசுகள் பெருகின. ஒன்றையும் ம. பா. என் காதிற்கு எட்டவிடவில்லை. காதிற்கு எட்டினால் அம் மகாநாட்டுப் பக்கமே நான் போகமாட்டேனென்பது அவ

ருக்குத் தெரியும். மகாநாடு நின்றாலும் என்னை விலக்க இஷ்டமில்லை. நான் சீர்காழிக்குச் சென்றேன். சம்பந்தப் பெருமான் பாதம் பட்ட வீதி மண்ணைத் தொட்டு அவரை நினைந்து வணங்கிப் பெருமிதமடைந்தேன். இளைஞர் மகாநாடு மிகச் சிறப்பாக நடந்தது. முதியோர் மகாநாட்டைப்போலக் கூட்டம். அதைவிட இங்கு ஆர்வம். நல்ல நெல் விளைவது போல் இங்கு இளைஞர் செஞ்சொல்லும் விளைந்தது. முப்பது பேருக்குமேல் பேசினர். ம. பா. வும் இளைஞர் மகாநாட்டில் பேசினார். பலருக்குப் பேச இடமில்லை. முடிவில் பலர் என்னை அதிகமாகப் பாராட்டினர். என்னை வேண்டாமென்று நினைத்தவர்களும் என்னை உள்ளன்புடன் பாராட்டி உள்ளதை யெல்லாம் சொல்லி ம. பா. பிடிவாதத்தைப் போற்றினர். சமுதாயத்துடன் ஒத்துப்போவதற்காக ம. பா. தன் வழிகளை மாற்றிக் கொள்வதில்லை. மேலும், போர்வைக்குள் இருந்தாலும், மேலிடத்திலிருந்தாலும் பொய்மையைத் தூர விலக்கிய வீரர். ம. பா. சமாஜத்தின் செல்வம். சமாஜம் சிக்கெனப் பிடித்த செல்வம்.

ஆழமில்லாப் படிப்பும், கருத்தில்லாப் பேச்சும், பரீட்சைக்கு நில்லாத சமயப் பற்றும், தொடர்ந்து நிலைபெறாது. அங்குமிங்குமாய் அலையும் தொண்டும், தீங்கை வெறுத்து நீக்கும் திறமில்லாக் குணமும் நிறைந்த இந்த நாளில் ம. பா. ஒரு பெரிய வழிகாட்டி.

அவர் முன் நிற்கும் தென்பழநி முத்துக்குமரன் அவருக்கு உடல் நலமும், பலவளமும், அமைதியும் தந்து, சமாஜத்திற்கும், சைவத்திற்கும் தொண்டுசெய்ய அருள்வானாக.

"அம்மையே யப்பா வொப்பிலா மணியே
அன்பினில் விளைந்த வாரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே."

சிவம், தமிழ்போற் சிறந்து வாழ்க!

புலவர் முருகவேள், பி.ஓ.எல்.

திருநெறியும் தமிழ்மொழியும் செழித்துயரப்
பலதொண்டும் சிறக்கச் செய்யும்
அருமைமிகு சான்றோருள் அருமைமிகு
பெருஞ்சான்றோய்! அரிய நல்ல
பெருமைபல அமைந்தொளிரப் பிறங்குகிற்போய்!
இளமுருகப் பெயர்கொள் தோன்றால்!
மருவியநின் மணிவிழா மாட்சிமைகண்
டுளம்மகிழ்கோம்! மகிழ்ந்து வாழ்க! 1

ஆங்கிலமும் தீந்தமிழும் ஆய்ந்துணர்ந்தோய்!
சட்டநுட்பம் அமையத் தேர்ந்திங்
கோங்குபுகழ் மிகக்கொண்டோய்! உயர்பால
சுப்ரமண்ய உரவோய்! யாங்கள்
நீங்கலிலா தென்ஞான்றும் நினைந்துமிகப்
புகழ்ந்தேத்தும் நிலையின் மிக்கோய்!
ஈங்குனைப்போல் ஒருசிலரே இனியதமிழ்ச்
சிவநெறித்தொண் டியற்று கிற்போர்! 2

மறைமலைஎம் அடிகளார் மறைத்திருநன்
ஞானியார்முன் மாண்பில் தோற்றும்
திறலொளிரும் உயர்சைவ சித்தாந்த
சமாஜந்தான் சிறப்புற் றோங்கி,
நெறிமுறையிற் பலதொண்டும் சிவநெறிக்கும்
தமிழ்மொழிக்கும் நிரம்பச் செய்யப்
பெறலரிய செவிலியெனப் பெரிததனைப்
புரந்தநின்சீர் பேசற் பாற்றோ? 3

சீரியபல் நலம்வாய்ந்தோய்! சிவநெறிநற்
றிருவாள! சிறந்தா ராய்ச்சி
ஆரியமாம் மொழிக்கணுமே அமைந்துயர்ந்தோய்!
ஆழ்வார்கள் அருளும் நூலின்

பெருமைகள் தாமுமிகப் பெரிதுணர்வோய்!
அறிவியற்குப் பிழையின் றாகக்
கூரியநற் சித்தாந்தக் கொள்கைகள்தாம்
நிறுவவல்லோய்! கூறல் என்னே? 4

பழுதறநற் **சாத்திரங்கள்** பதினான்கும்,
திருமுறைகள் பன்னி ரண்டும்
முழுவதும்நன் றெழுத்தெண்ணி, முயன்றுமிகப்
பயின்றுணர்ந்து திளைத்து மூழ்கிப்
பொழுதனைத்தும் சிவநெறிச்செந் தமிழ்த்தொண்டு
புரிவதற்கே போக்கி நிற்போய்!
தொழுதுனையாம் வணங்கிநின்தாட் சுவடுபற்றி
ஒழுகலன்றிச் சொல்வ துண்டோ? 5

பெரும்புகழ்மைச் சிவநெறிநற் பெரியோய்!நீ
திருமுறைகள் பெரிதும் ஆராய்ந்
தரும்பொருள்நல் **அகராதி**, அரியபொருட்
குறிப்புக்கள் என்றுங் காங்கே
இருந்தெடுத்துத் தொகுத்துமிக இனிதாகத்
தந்தருளி இருப்ப தொன்றே
விரும்பிநினை எவருமிக வியந்துவந்து
போற்றுதற்கு மிகவும் சாலும்! 6

நின்னரிய பெருமைப்பு, நிரம்புகல்வி,
ஆராய்ச்சி, நிலைத்த பல்தொண்(டு),
என்னுமிவை தாமன்றே இனியபல
தமிழ்ச்சைவ நூல்கள், ஈங்கு
நன்முறையிற் குறைவிலையில் நலஞ்சிறக்க
வெளிப்போந்து நாட்டிற் பல்லோர்க்
குன்னரிய சிவநெறிச்சீர் உணர்த்தியன!
இனையைநீ ஊழி வாழ்க! 7

சிலமிகு தமிழ்ப்பெரியார் **திரு.வி.க.**
திருக்குறள்மா நாடொன் றின்கண்,
சாலஇந்நாட் புதுமைகளும் சைவநெறி
அறிந்தனவே என்று சாற்ற,

ஏலமிக யாழ்ப்பாணத் தினியமன
தலைமையுரை எடுத்துப் போற்றின்,
பாலசுப்ர மணியனெனும் பண்புடைய
பெரியோய்!நின் பரிசென் சொல்கேம் ? 8

மணலிவரும் உயர்வேளான் வண்குடிதான்
தமிழ்நாட்டில் மாட்சி ஓங்கி,
எணலுறிற்பன் னெடுங்காலம் இசைபெற்று
விளங்கிநிற்கும் ! இனிதே அந்த
நணலரிய பெரும்புகழ்சேர் நற்குடியின்
தொடர்புற்ற நல்லோய் ! நீதான்
இணையருநம் சிவநெறிக்கோர் வேலிஎன
இலங்குகின்ருய் ! இனிது வாழ்தி ! 9

மயிலைகிழார் இளமுருக ! மயிலைமா
தவதாச ! மாட்சி எல்லாம்
பயிலஅமைந் தொளிருமுயர் பாலசுப்ர
மண்யநல்லோய் ! பலரும் போற்றும்
இயலமைய மணிவிழா இனிதயர்ந்தாய் !
யாம்மகிழ்கோம் ! இனியும் பல்காற்
செயலரிய தொண்டுகள்தாம் செய்துகொண்டு,
சிவம்தமிழ்போற் சிறந்து வாழ்க ! 10

மன்றமிகச் சைவசித் தாந்த மகாசமாஜம்
நின்றுநிலைத் தோங்க நெடிதுழைத்தோய் !—நன்றனைத்தும்
துன்னும் உயர்பால சுப்ரமண்யத் தோன்ருல் !நீர்
இன்னுமிகப் பல்லாண் டிரும் !

பண்டைத்தமிழனின் சைவ நன்னெறி

இரா. கு- நல்லகுற்ருலம் பிள்ளை, இராசபாளையம்.

பண்டைத் தமிழனுக்கு யாதும் ஊரே, யாவரும் கேளிர். அவன் அருட்செல்வன் ; நெஞ்சத்து நல்லன் ; மனத்துக்கண் மாசிலன். வேண்டாமை அன்ன விழுச்செல்வமுடையான். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன். தானின்புறுவது உலகின்புற விழைவான். நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லான்.

அளவறிந்து, குற்றமிலானுய்க் குடிசெய்து வாழ்வான். சிறப் பினும் செல்வம் பெறினும் தீயார்க்கும் தீமை செய்யான் ; எவர்க்கும் நன்மையே புரிவான், பிறர் இணரெரி தோய்வன்ன இன்னு செயினும் வெகுளான் ; அவர் கறுத்தின்னு செய்த அக்கண்ணும் மறுத்தின்னு செய்யான் ; அவர்க்கும் அவர் நாண நன்னயமே செய்திடுவான்—அதனையும் அப்பொழுதே மறந்திடுவான். யான், எனதென்னும் செருக்கறுப்பான். தன்னை வியவான் ; பிறர் தீமை சொல்லான், தூற்றான். நன்றி மறவான் ; மறந்தும் பிறன் கேடு சூழான். பாடறிந் தொழுகுவான். தன்னின் மெலியாரையுமே, இகழான் ; பிறரை, அன்பொடு முகனமர்ந்த இன்சொல்லால் விழைவான். அவர்க்குத் தன்னுதவி வேண்டுமாயின், தன்னலானவரை அவர்க்கு உதவவும் செய்வான். ஆன்ற அறிவும் ஆள்வினையு முடையான். தான் பிழைத்தற்கும், பிறர் பழிக்கும் நாணு வான். தனக்குத் தீதும் நன்றும் தன்னலேயே விளைவன என்பதனை உணர்வான். பிறர் பிழையையும்—தன்னை யிகழ்வ தாயினும் பொறுப்பான்.

தெய்வம் : அவனுக்கு ஒன்றே குலம், ஒருவனே தேவன். அத்தேவனும் அவனுக்குப் பெருந்துணை—தோன் றாத் துணை. அவன் மூவான், பிறவான், இறவான் ; மற்று ரும் தனக்கொப்புயர்விலான் ; வேண்டுதல், வேண்டாமை யிலான். துறவாதே, கட்டறுத்த சோதியான் ; தூநெறிக்குந் தூநெறியாய் நிற்பான் ; தாயுமானவன், அம்மையப்பன் ; அன் பினில் விளைந்த ஆரமுது ; குறைவிலா நிறைவு ; ஞானப் பெருங்கடல் ; நன்றுடையான், தீயதிலான் ; துன்பங்களில் லாதான், இன்பன், இன்பந்தருவன். அவன், நம்மினும் நமக் கினியன் ; நாமறியாதே நம்முள் வந்து நல்லனவுந் தீயனவுங் காட்டா நிற்பன் ; நம்மகத்துப் பிரிவிலாத் துணையா யுட னிருந்தறிந்து பெரும் பயனளிப்பன் ; நம் பிழையெலாம் பொறுப்பன் ; பிழையைத் தவிரப் பணிப்பன். தன்னை வைவாரையும் வாழவைப்பன் ; பிறரைப் பேணுதாரைப் பேணு தான். கரையிலாக் கருணைமா கடல். அடியார்க்கும்—அற் றார், அலர்ந்தார் எவர்க்கும் கற்பகமாய் அருள் செய்வான்.

குடும்பம்: அன்பும் அறனும் நிரம்பியது; பழியஞ்சி, பகுத்துண்டு, பல்லுயிர் பாதுகாத்துத் தமக்கும் பிறர்க்கும் உண்மையாகவும் நன்மையாகவும் வாழ்வது; ஒருவரையொருவர் உரித்துடன் பேணியும் மதித்தும், எதனையும் காலமேற்க எல்லாருமாக அளவளாவிப் பேசி ஒரு நல்ல முடிவிற்கு வந்து அதனை ஊக்கமாக முடித்திடவுந்தூண்டும் குடியரசுப் பாங்கே மிளிர்வது. அதன் தலைவன், பிறன்மனை நோக்காப் பேராண்மையாளன்; தலைவி, கற்புக்கரசி. அவ்விருவரும், ஒருவரோடொருவர் இணங்கிப்போவரன்றி, கனவிலும் பிணங்கார்; தன் துன்பம் மறந்தும் மற்றவர் துன்பம் நீங்கி இன்பமுற முயலுவர். தலைவி, மற்றும் நற்குண நற்செயல்களை வளர்ப்பதிலும் சோர்விலாள்; அவள், தற்காத்துத் தற்கொண்டானைப் பேணி, தம்மிருவரையும் தகைசான்ற புகழ் நீங்காது, வருவாய்க்குத் தக்கதாக வாழ்க்கை நடத்திவரும் நல்லாள். மக்கள் அறிவறிந்த நன்மக்கள், ஏவாமக்கள்.

சேர்க்கை - நட்பு, பகை: அவன், பொய் பேசுவோர், பிறன் பொருள் விழைவார், வஞ்சகம் நெஞ்சகம் பொதிவார், தீயன மகிழ்வார், நல்லன இகழ்வார், செருக்கினுல் தம்மையே மதிக்கும் வீணர் முதலியோருடன் சேரான். குற்றங் குறைந்து குணம் மேலிடும் அன்பர் உறவையே நாடுவான். நற்குடிப் பிறந்து, தன்கண் பழி நாணும் மாசற்ற பெரியாரைப் பேணி தமராகக் கொள்வான். எவரையுமே பிழையான், பகையான்; உட்பகைக்கும் இடந்தரான். நண்பனின் இடுக்கணை உடுக்கை யிழந்தவன் கைபோலக் களைவான்; அவன் அழிவந்தசெயினும், அன்பறுன். அவன்கண் தேற்றுவொழுக்கம் காண்பானுயின், திருந்தும்வரை பொறுப்பான்; திருந்தானுயின், தூற்றுதே தூர விலகிடுவான்.

கல்வி, கேள்வி, அறிவு: அவன், கேடில் விழுச்செல்வமாம் கல்வி மட்டுமல்ல, செல்வத்துட் செல்வமாம் கேள்வியுமுடையான்; எனைத்தானும் நல்லவைவையே—ஒழுக்கமுடையார் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்லே கேட்பான். எப்பொருள் எத்தன்மைத்தாயினும், எவரெவர் வாய்க் கேட்பி

னும் அப்பொருளின் நுண்பொருள் காண்பான். அஞ்சுவதறி வான், அஞ்சுவது அஞ்சுவான். சான்றோரையுங் கற்று, கற்றனைத்தூறும்—அரும்பயன் ஆயும் அறிவினைப் பெருக்கியும் வருவான். தீதொரீஇ நன்றின்பா லுய்க்கும் அறிவே அறிவெனுங் கொள்கையான்; அதனால் தன்மேல் அழுக்காறு கொள்வாரும்—தன்னைப் பகைப்பாரும் தன்னை அழிக்கலாகா அறிவரணுமுடையான்.

ஒழுக்கம், பழக்கம், நினைவு, பேச்சு, செயல்: கற்பவை கசடறக் கற்று, அதற்குத்தக மெய்ம்மையாம் உழவைச் செய்து, நன்மையாம் விருப்பெனும் வித்தை வித்தி, பொய்ம்மையாம் களையை வாங்கி, பொறையெனும் நீரைப் பாய்ச்சி, தம்மையும் நோக்கிக்கண்டு, தகவெனும் வேலியிட்டு, செம்மையுள் நிற்பான். நன்மையே விளையுமெனினும், நேர்மை தவறான். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் இந் நான்கினையுங் கடிந்து, ஒழித்து வருவான். கொல்லான், புலாலுண்ணான்; மாறல்லதும் துவரப் பசித்தபின் அளவறிந்துண்பான். பிறர் துன்பத்தினையும் தன் துன்பம்போல் கருதித் துடைப்பான்; பிறர் வருந்தாதிருக்க, தன் வருத்தத்தையும் மறைப்பான். நஞ்சு பெயக்கண்டும், அதனை உண்டமையும் பெருந்தகையான்; இடுக்கண் வருங்காலும் நகைத்து மறைப்பான்.

எவர்க்கும் நன்றாம் பணிவுடையன். சிந்தை நிறைந்த சீரிய செல்வமிக்கான். உலகம் நடுங்கினும் தன்னுளம் நடுங்கான். அவன் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளான்; பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேமென உள்ளத்தால் உள்ளலும் தீதென, தீயன எதுவும் உள்ளான். எனைத்தானும், எஞ்ஞான்றும், யார்க்கும் மனத்தானும் மாணா செய்யான்.

யார்மாட்டும் இன்புறூஉம் இன்சொலான்; தீய வழுக்கியும் வாயால் சொலான்; பயனில சொல்லான்; கண்டொன்று காணுதொன்று பேசான்.

சொலல்வலன், சொற்சோர்வு படான்; அவையஞ்சான். நன்மையும் இனிமையும் விளையப் பேசுவான், காலங்கருதிக் குறிப்பறிந்து வெறுப்பில கேட்டார்ப் பிணிக்குந் தகைவாய்க் கேளாரும் வேட்ப மொழிவான்.

எவ்வறமும் முயன்று செய்வதன்றி இரந்து செய்யான், அடுக்கிய கோடி பெறினும் குன்றுவ செய்யான். ஈன்றாள் பசி காண்பானாயினும் சான்றோர் பழிப்பன செய்யான். இலன் என்று தீயவை செய்யான். சலம் பற்றிச் சார்பில செய்யான். பிறர் அஞ்சுவன, இழிந்தன செய்யான். நன்றி பயவாதன செய்யான். சொல்லியவண்ணம் செய்வான். துன்பமுறவரினும் இன்பம் பயக்கும் வினைவிடான், எதனையும் உலக இயற்கை, ஏற்ற இடம், தக்கவழி, பொருள், காலம் முதலியன எண்ணிப் பார்த்தே செய்வான்.

முயற்சி, தேட்டம், ஆக்கம் : இன்பம் விழையாது தான் எண்ணித் துணிந்த கருமத்தினை முடித்தலையே விரும்புவான். அவ்விலக்கிற்கு விளையாது, தாழாது முயன்று ஊழையும் உப்பக்கம் காண்பான். பழியஞ்சியும், அன்பொடும் அருளொடுமே பொருளைத் தேடுவான். தன் வேலைத் திறத்திற்கேற்ற ஊதியத்தையும் எவர்க்கும் தீதில்லாவகையிலேயே கிடைக்கப் பெறுவான். வாணியஞ் செய்யின், பிறவும் தனதுபோல் பேணிக் கொடுப்பதூஉம் குறைபடாமல் கொள்வதூஉம் மிகைபடாமல் செய்வான்.

சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக.

"கஃறீது"

வித்துவான், ஆ. சிவலிங்கனார், மயிலம்

கல் என்ற சொல்லுடன் தீது என்ற சொல் சேரின் அவை கஃறீது என்றாகும். இவ்வமைப்பு

"தகரம் வரும்வழி ஆய்தம் நிலையலும்
புகரின் றென்மனார் புலமை யோரே" (தொல். எழு. 369)

"லனவென வரூஉம் புள்ளி முன்னர்த்
தநவெனவரிற் றனவா கும்மே" (தொல். எழு. 149)

என்னும் தொல்காப்பியச் சூத்திரங்களின் விதிப்படி அமைந்தது. இதனுள் வருமொழியின் முதலில் 'த'கரத்தைக் கண்டதும் நிலைமொழியிறுதியிலுள்ள (குற்றெழுத்தின் பின் உள்ள) 'ல'கரம் ஆய்தமாகத் திரிந்தது. (கஃ + தீது)

வருமொழியின் முதலில் உள்ள 'த'கரமோவெனின் நிலை மொழியீற்றிலுள்ள 'ல'கரத்தைக் கண்டால் 'ற'கரமாகத் திரிதல் வேண்டும். (கல்+றீது) 'ல', 'த' ஆகிய இரண்டெழுத் துக்களின் திரிபும் ஒரே காலத்தில் நிகழக்கூடியன அல்ல. எனினும் லகரம் ஆய்தமாகத் திரிந்துவிட வருமொழித் தகரம் தனக்கு முன்னர் ஆய்தம் இருப்பினும் அவ்வாய்தம் லகரத் தின் திரிபாகலான் அதனை ஆய்தமாகக் கருதாமல் முன்னை லகர மெய்யென்றே கருதித் தான் றகரமாகத் திரிகின்றது. (கல்+தீது=கஃ+தீது; கல்+தீது=கல்+றீது; கஃறீது)

கஃறீது என்ற இரண்டு சொற்கள் சேர்ந்த ஒரு புணர்ச் சியினைத் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் உவமையாக ஆண்டு சைவ சமயக் கருத்தொன்றையும் குறிப்பாகக் கூறி யுள்ளார். ஓரிடத்தில் விங்குளாபுரி என்ற நகரில் மாதரசன் என்ற அந்தணனுக்கு மாதாம்பிகை என்ற கற்புடைய மனைவி வயிற்றில் சிவபிரான் ஆணைப்படி நந்தி யெம்பெருமான் தோன்றினர். அவர் மாதாம்பிகை வயிற்றகத்திலிருந்து தோன்றுங்கால் சிவபிரான் அக்குழந்தைக்குத் திருநீறிட்டு இலிங்கதாரணம் செய்து வசவன் என்ற பெயரும் சூட்டினர். மக்கள் அவ் வசவனைக் கண்டு மனமகிழ்வு கொண்டனர். நந்தியெம்பெருமான் தமது விடை வடிவு நீங்கி மக்கள் வடிவை மேற்கொண்டதற்கும், மக்கள் நந்தியாகிய வசவக் குழந்தையைக் கண்டு மகிழ்ந்ததற்கும் நமது சிவப்பிரகாச அடிகள் கொடுத்த இலக்கண உவமை 'கஃறீது' என்ற தொடர்ச் சொல்லின் அமைப்பாகும். நந்தி மாதாம்பிகை யிடத்துத் தமது பழைய வடிவை நீத்து மக்கள் வடிவில் தோன்றினர். தோன்றினும் மக்கள் அவரை மனிதக் குழந்தையென்றெண்ணாது பழைய நந்தியே என்று கொண்டு மகிழ்ந்தார்கள். கல்+தீது என்பதில் லகரம் தகரத்தோடு ஓசைப் பொருத்தமுறச் சேரவேண்டுமாதலின் தான் ஆய்த மாகத்(ஃ) திரிந்ததுபோல, நந்தியானவர் தமது கைலாய இருப்பிடத்தினைவிட்டு மண்ணுலகத்தில் மக்களுடன் சேர வருவதால் அதற்கேற்ப மக்களுடம்பை யெடுத்தார் என்றும், கஃ+தீது என்பதில் ஆய்தத்தைக் கண்ட தகரம் ஆய்த

மானது பழைய என்பதன் திரிபுதான் என எண்ணி, ஆய்தத்தை லகரமாகவே கொண்டுதான் றகரமாகத் திரிதல் போல, மக்களும் மக்களுடம்பில் குழந்தையாக இருப்ப வரைக் குழந்தையென்றெண்ணாமல் பழைய நந்தியே என்று நினைந்து மகிழ்ந்தார்கள் என்றும் உவமையைப் பொருத்திக் கொள்ளுதல் வேண்டும். இக்கருத்தமைந்த பாடல் வருமாறு :—

குறில்வழி லகரம் தனிநிலை யாயும்
 கூறிய தகாமுன் எழுத்தென்
றறிகுறி வடிவம் திரிதல்போல் நந்தி
 யடல்விடை மெய்திரிந் தறினும்
நறுமலர் விழியாற் கண்டவ ரெல்லாம்
 நந்தியே யென்றுள மகிழ்ந்தார்
பெறுதவ முயன்ற அன்னையும் பிதாவும்
 பெறுமுவ கையினையா ருரைப்பார்.

(பிரபுலிங்கலீலை-அங்கமாதேவி உற்பத்தி, 28)

இச் செய்யுளுக்கு மேற்கூறியவாறன்றிப் பிறவாறும் பொருள் கூறுவர். உயர்திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் கூறிய பொருள் வருமாறு :—

"ஒரு தனிக் குற்றெழுத்தை யடுத்துவரும் லகர ளகரங்களுள் ஒன்று நிலைமொழியீறாக நிற்ப, வருமொழி முதலில் தகர எழுத்துடைய சொல் புணர்ந்து அவ்வழியாக முடியுமாயின் அந்நிலை மொழியீற்றினின்ற லகர ளகரங்கள் ஓர் ஆய்த எழுத்தாக மாறும். வருமொழி முதலில் நின்ற தகரம் லகர ளகரங்களோடு புணர்வழி யடையும் திரிபுப் படியே றகர டகரங்களாக மாறும் என்பது இலக்கணம். இதனை,

"குறில்வழி லளத்தவ் வணையின் ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழி யானே"

எனப் போதரும் நன்னூற் சூத்திரத்தால் அறிக.

"இங்கு ஆசிரியர் இவ்வுணர்ச்சியை நன்கு கருதி யமைக்கின்றார். ஒருமெய் வேறொரு மெய்யாக மாறுதல்

தான் இயல்பு; மகரமும் ககரமும் புணரின் ஙகரமாகவும், மகரமும் சகரமும் புணரின் ஞகரமாகவும் திரிதல்போல. இங்ஙனமன்றி முதல் எழுத்துக்களில் ஒன்றாகிய லகர மெய் சார்பெழுத்தாகிய ஆய்த எழுத்தாக வியப்புறும்படி மாறியது நோக்குவார், 'இஃது இயற்கையாகிய ஆய்தமோ? புணர்ச்சி வகையால் வந்ததோ? என நுட்பமாக ஆய்ந்து, லகரமன்றே இவ்வாறு மாறிற்று? மாறினும் இது பகுக்கப்படும்போது தன்மெய் காட்டுமேயன்றி இப்போது தோன்றும் ஆய்த உருவைக் காட்டாது' என நிச்சயிப்பர். அஃதொப்பவே கடவுட்டன்மையுடைய நந்திபிரான் தமது தகைமைக்கு ஒவ்வாத ஒரு மக்கட் பிறவியில் அவதரித்தார் என்றாலும், ஊன்றியாராயுங்கால் அவர் நந்தியே தவிர வேறு மனிதருள் (பாசசிவர்களுள்) ஒருவர் அல்லர் என்பது தெற்றென்னும். அல்வழிச்சந்தியில் 'த'கர முன்னுடைய வருமொழி புணர்க்கப்படுங் காரணத்தால் மபக்க விதியின்றி 'ல'கரம் ஆய்தமாக மாறினாற்போலவே, சிவபெருமானது ஆணை தாங்கி நிலவுலகின் மக்கட்குப் புறச்சமயப் புன்மை போக்கி மெய்ச் சைவ சமய மேன்மை தெரித்தற் பொருட்டே அவர் தமக்கு இயல்பல்லாத மானிட உருவத்தோடு பிறந்தார் எனக் கொள்க என அகலவுரை கூறுமாறு இவ்வருஞ் செய்யுள் பொலிந்து நிற்பதறிக"

(வீரசைவம்-மலர் 2, இதழ் 10, பக். [1]97–8)

திரு. பிள்ளையவர்கள் அகலவுரை கூறியது நந்தியம்பெருமான் தமது விடை வடிவு நீங்கி மக்கள் வடிவுற்றதற்கேயாம். மக்கள் மகிழ்ச்சிக்கு யாதொரு சிறப்பும் இல்லை. அதனால், கல், திது ஆகிய இரண்டையும் சேர்க்கும்போது (கல்+திது) நிலைமொழி யிறுதியிலும் வருமொழி முதலிலும் ஆக ஈரிடத்திலும் திரிதல் உண்மையால் அவற்றிற்குத் தக்கவாறே, நந்தியாகிய வசவர், கண்டவராகிய மக்கள் ஆகிய இருவர்க்கும் அகலவுரை கூறுவதே சிறந்ததென்னலாம். அகலவுரை வருமாறு:—

"லகரம் தகரத்துடன் இடைநிலை மயக்கம் கொள்ளாமையாலும், வருமொழித் தகரத்துடன் கூடுங்கால் அதற்கேற்ப வடிவு வேறுபட்டேயாக வேண்டுமாதலினாலும், ஆய்தமாகத் திரிந்தது. அதுபோல நந்தியானவர் சிவபிரான் ஆணை தாங்கி உலகின் மக்களை நன்னெறி நிறுத்தி அருள் புரிதற்கு அவர்களிடத்தில் விடை வடிவிற் சேறல் பொருந்தாமையானும், அவர்கள் வடிவிலேயே சேறல் வேண்டுமாதலினாலும் தமது விடை வடிவு நீங்கி மக்கள் வடிவை மேற்கொண்டார். வருமொழித்தகரம் ஆய்தத்திற்கும் தனக்கும் மயக்கத் தொடர்பிருப்பினும் ('அஃது' என்பதில் இரண்டும் மயங்கியது காண்க.) 'கஃறீது' என்று நில்லாமல் ஆய்தம் லகரத்தின் திரிபுதான் என்று கொண்டு றகரமாகத் திரிந்தது. அதுபோல, மக்கள், வசவனாகிய குழந்தையைக் கண்ட அளவில் மகிழவேண்டி யிருக்கவும், அதற்கு மகிழாமல் அக் குழந்தை நந்தியே என்றுணர்ந்து மகிழ்ந்தார்கள் என்க."

அன்றியும் இவ்வுவமைப் பொருள்களிடத்து ஓர் உண்மைப் பொருளும் விளங்குதல் காணலாம். தட்சிணாமூர்த்தியின் சின்முத்திரையினை ஈண்டு நினைவுக்குக் கொண்டுவருதல் நல்லது. சின்முத்திரையின்நிலை பெருவிரலின் அடியைச் சுட்டு விரலின் நுனி மடங்கித் தொடுதல். மற்றைய விரல்கள் தனித்து நிமிர்ந்து நிற்றல் வேண்டும். அதனால் உணர்த்தப்படுவது மும்மலங்களின் நீங்கி உயிரானது இறைவனை அடைதல் வேண்டும் என்பதாம். உயிர்தான் மும்மலங்களை நீக்கி முயன்றுவரினும் இறைவனும் தன் நிலையினின்றும் சற்று இறங்கி உயிர்க்குத் துணை புரிதல்வேண்டும். சுட்டு விரல் மடங்கிச் சென்றாலும் பெருவிரலும் அசைந்து சிறிது மேல் எழுவதைக் காணலாம். இதனால், இறைவனை யடைய உயிர் முயற்சிக்க வேண்டும் என்பதும், இறைவனும் உயிரை ஆட்கொள்ளத் தன் நிலையினின்றும் சற்று இறங்கி வருதல் வேண்டும் என்பதும் போதரும். 'அவன்அருளாலே அவன் தாள் வணங்கி' என்ற மாணிக்கவாசகர் வாக்கும் காண்க. இவ்வுண்மைதான் உவமையால் விளக்கப்பட்ட பொருளிடமாக நாம் உணரக் கிடக்கின்றது. உலகினரை யாட்கொள்ள

வேண்டி நந்தி தமது வடிவு நீக்கி மானிட வடிவுகொண்டனர். கண்ட மக்களும் அவரை மானிடராக நினையாது தம்மறிவால் நந்தியே என உணர்ந்து மகிழ்ந்தனர். நந்தியாகிய வசவரும் மக்களை ஆட்கொண்டு வீடுபே றளித்தனர் என அவர் வரலாற்றிலிருந்து அறியலாம். நந்தியே சிவன் என்று கொண்டு, மக்களே உயிரெனக் கொண்டு, இவ்விரு வரின் நிலைமாற்றங்களை எண்ணின், சிவத்தின் அரு ளால் உயிர் அவனையடைகிற உண்மையானது (கஃறீது என்ற ஒரு சொற்றொடர் மூலமும்) அப்பாடலில் பொதிந்துளது என்னலாம். யாம் கூறியபடி அகல உரை கோடற்கு ஏற்ப அப்பாடலின் கொண்டு கூட்டு வருமாறு :—

"குறில்வழி லகரம் தகரமுன் எழுத்தென்று அறி குறி வடிவம் தனி நிலையாயும் திரிதல்போல், நந்தி யடல் விடை மெய்திரிந் துறினும்" (நிலைமொழியில் தனிக் குற்றெழுத்தின் பின்னின்ற லகரம் வருமொழி முன்னின்ற தகர எழுத்தின் முன்னே, தன்னையறிதற்குக் குறிக்கப்பட 'ல' என்ற வடிவமானது ஆய்தமாயும் திரிவதுபோல, நந்தி தன் இயல்பான விடை வடிவு நீங்கி மக்கள் முன்னே மக் கள் வடிவாக மாறினன்.)

"கூடிய தகரம், குறில்வழி லகரம் தனிநிலையாயும் முன்எழுத் தென்று, அறிகுறி வடிவம் திரிதல்போல், நறு மலர்விழியால் கண்டவரெல்லாம் நந்தியேயென்றுள மகிழ்ந் தார்" (வருமொழி முதலிற் கூடிய தகரம், குறில்வழி லகரமானது ஆய்தமாக இருந்தாலும் ஆய்தமாதற்கு முன் லகர எழுத்துத்தானே என்றெண்ணித் தன்னை யறிதற்குக் குறிக்கப்பட்ட 'த' என்ற வடிவமானது 'ற' என்று திரிதல் போல வசவரைக் கண்ட மக்கள், மக்கள் வடிவில் அவரைக் கண்டாலும் மக்களுள் ஒருவராக எண்ணுமல் அவரது முன்னிலையாகிய நந்தி என்றே கருதித் தாங்கள் மகிழ்ந் தார்கள்.)

இங்ஙனமாக முறையே நந்திக்கும், மக்களுக்கும் ஏற் பட்ட மொழி மாற்றிக்கொண்டு பொருள் கூறுதல் சிறப்புடைத் தாம்.

முக்கிய அறிக்கை

விற்பனைக்கு உரிய சமாஜப் பதிப்பு நூல்களைப் பெற விரும்புவோர் **பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1** என்ற முகவரிக்கு எழுதிப்பெறுக. புத்தகங்களை அஞ்சல் மூலம் பெறுவது அதிகச் செலவாதலால் புத்தக வியாபாரிகள் மூலம் பெற முயலுக.—தி. கி. நா.

நிகழ்ந்தவை

1. மாமகம் :—கும்பகோணம் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை வருவது, இந்த பிப்ரவரி மாதம் 25-ம் தேதி வந்தது. இலட்சக்கணக்கில் மக்கள் மாமகக் குளத்தில் நீராடினார்கள். வியாழன் சிங்க ராசியில் புக, சந்திரன் மகத்தில் இருக்க ஏற்படும் மாமகம் மிகச் சிறப்புடையது ஆகும்.

2. தவத்திரு. சாந்தலிங்கர் குருபூசை :—மகத்தின் போது 25–2–56-ல் நடைபெற்றது. காலையில் கவியரங்கம் டீ.கே.பி.தி சோமசுந்தரம் பிள்ளையவர்கள் தலைமையிலும், பகலில் மூர்த்தி வழிபாடும் மாகேசுர பூசையும், மாலையில் கவிஞர் கல்யாணசுந்தர கவுண்டருக்குப் பொன்னாடையும், வாழ்த்துக்களும், திரு. பாஸ்கரத் தொண்டைமான் 'தெய்வமாக் கவி' என்ற சொற்பொழிவும் நடைபெற்றன. இரவில் மூர்த்தித் திருவுலாவும், இரவில் 'யார் மனிதன்' என்ற நாடகமும் நடைபெற்றன.

3. திரு. சாந்தலிங்கர் கல்லூரி விழா :— காலையில் திரு. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் திரு. கே. இராமலிங்கனார் சொற்பொழிவும், மாலை அருள்திரு. குன்றக்குடி அடிகளார் தலைமையில் மாணவர் சொற்போட்டியும் மூன்று சொற்பொழிவுகளும் நடைபெற்றன. திருமதி டயாஸ், பி. ஏ. அவர்கள் பரிசு வழங்கத் திரு. டயாஸ், எம். ஏ., ஏ. எஸ். பி. அவர்கள் ஆசி கூறினார்கள். இரவில் மாணவர்கள் 'புயலும் தென்றலும்' என்ற நாடகம் நடத்தினார்கள்.

மயிலைகிழார் மணிவிழா

அன்புடையீர் !

1956 மார்ச் 25-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு, சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில், சைவத் திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், திருப்புகழ், சங்க இலக்கியம், சீவகசிந்தாமணி முதலிய அடக்கவிலைப் பதிப்புகளையும், 'சிவஞான போதம் தமிழ் முதல் நூலே' என்பது போன்ற பல அரிய ஆராய்ச்சி நூல்களையும் சமாஜத்தின் வழியாக வெளியிட்டவரும், நாலாயிரம், திருப்பாவைப் பேருரைகள் முதலிய வைணவ நூல்களையும் வெளியிட்டவருமான தனிப் பெருந்தொண்டர் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி.ஏ., பி.எல். அவர்களைச் சிறப்பிக்க, **சமாஜச் சிறப்புக் கூட்டம்** நடைபெறும். அக் கூட்டத்தில் தமிழன்பர்கள், சமய சபைகள், தமிழ்க் கழகங்கள், புலவர்கள், புரவலர்கள் அனைவரும் போந்து கலந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

தி. கி. நாராயணசாமி நாயுடு
செயலாளர்
சைவ சித்தாந்த மகா சமாஜம்

10, மான்டீத் ரோட்
எழும்பூர்–சென்னை-8

குறிப்பு :—1. விரிவான நிகழ்ச்சிமுறை பின்னர் வரும்.

2. வாழ்த்து உரைகளையும் மடல்களையும் சாரமாகச் சில வரிகளில் சுருக்கி 22–3–56க்குள் மேலேகண்ட முகவரிக்கு முன்னதாக அனுப்பவும்.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi. Edited by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 10, Monteeth Road, Egmore, Madras-8